விலை சதம் 50 ★ பக்கங்கள் 10

சகலவித பல் வியாதிகளையும்
போக்கவல்லது
அண்ணா பற்பொடி
இலங்கையின்
எப்பாகத்திலும் கிடைக்கும்.
கூடுதலாக அண்ணா
பற்பொடியை வாங்கும்
வியாபாரிகளுக்கு விசேடகழிவுண்டு
அண்ணா தொழிலகம்.
இணுவில்
தொலைபேசி: 7412

# ஈழநாடு
## வார மலர்
THE EELA NADU VARAMALAR

மில்க்வைற்
தொழிலகம்
வர்த்தகப் பெருமக்களுக்கு
ஒரு
பணிவான வேண்டுகோள்
தயவுசெய்து
எங்கள் தயாரிப்புக்களை
உரிய மேலுறைகளோடு
விற்பனைசெய்து ஆதரவு
நல்குங்கள்.
-தொழிலதிபர்

UNIVERSITY OF SRI LANKA JAFFNA CAMPUS LIBRARY
RECEIVED 1979 -2- 6
PERIODICALS DIVISION

மலர் 20 தை 22 ... அவ் 6 ஞாயிற்றுக்கிழமை (4—2—79) இதழ் 356

# இன மொழி பிரச்னைகள் ஜனநாயக ரீதியில் தேசிய நலன் கருதி தீர்த்துவைக்கப்பட வேண்டும்

## கண்டியில் இந்தியப்பிரதமர்

### இரு நாடுகளிலும் ஒரே பிரச்னை உண்டு என்றும் கூறினர்

(நமது நிருபர் சு. மகாலிங்கசிவம்)

[கண்டி]

இன, மொழிப்பிரச்னைகள் இலங்கையில் மட்டுமல்ல, இந்தியாவிலுமே இருந்துவருகின்றன. இப்பிரச்னைகள் ஜனநாயக ரீதியில் தேசிய நலன் கருதி தீர்த்து வைக்கப்பட வேண்டுமென்று இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று கண்டியில் தெரிவித்தார்

கண்டி குயின்ஸ் ஹோட்டலில் இந்திய சமூகத்தவர்கள் அளித்த வரவேற்புபசாரத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே திரு. தேசாய் மேற்கண்டவாறு கூறினர்.



ஒரே நாட்டில் வெவ்வேறு பிரிவினரும் வெவ்வேறு பிரிவுகளும் இருந்துவருவதில் எதுவித பலனும் கிட்டமாட்டாது என்றும் தெரிவித்த திரு. தேசாய், ஜனநாயகக் கோட்பாடுகளிலும் தனியார் சுதந்திரத்திலும் இந்தியாவும் இலங்கையும் அசைக்கமுடியாத நம்பிக்கை கொண்டுள்ளன என்றும் கூறினர்.

திரு. தேசாய் மேலும் கூறியதாவது:-

**கடல்தான் எம்மைப் பிரிக்கிறது**

இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையே பல ஒற்றுமைகள் உண்டு, ஒரே கலை கலாச்சாரத்

[10-ம் பக்கம் பார்க்க]

## பலாலி ஊடாக மீண்டும் விமான சேவை?

[யாழ்ப்பாணம்]

பலாலி விமான நிலையத்துக்கூடாக மீண்டும் விமான சேவைகள் ஆரம்பமாகவிருப்பதாகத் தெரிகின்றது.

சில மாதங்களுக்கு முன் பலாலியிலிருந்து புறப்பட்டுச் சென்ற 'அவ்ரோ' விமானம் இரத்மலானை விமானநிலையத்தில் வைத்து குண்டு வெடிப்புக்குள்ளாகி சீர்குலைந்து போனதைத் தொடர்ந்து

[10-ம் பக்கம் பார்க்க]

## ஆசிரியர்களுக்கு வேலை நீக்க கடிதம்?

[கொக்குவில்]

வட பகுதியில் பாடசாலை பகிஷ்கரிப்பில் பங்குபற்றியதாகக் கூறப்படும் நூற்றுக்கு மதிகமான ஆசிரியர்களுக்கு நேற்று யாழ். கல்விக்கந்தோரிலிருந்து வேலைநீக்க அறிவித்தல் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

இம்மாதம் 1-ம் 2-ம் திகதிகளில் பாடசாலைகளைப் பகிஷ்கரித்த ஆசிரியர்களுக்கு வேலை நீக்க உத்தரவு வழங்கவேண்டுமென்ற கல்வி மந்திரியின் பணிப்பைத் தொடர்ந்து கல்வி மாஅதிபர் திரு.

(10-ம் பக்கம் பார்க்க)

## விமான நிலையத்தில் அமோக வரவேற்பு

(கொழும்பு)

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய் நேற்று முற்பகல் கட்டுநாயக்கா விமானநிலையத்தை வந்தடைந்தபோது மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது.

பிரதமர் திரு தேசாயை ஏற்றிவந்த இந்திய விமானப் படையைச்சேர்ந்த ராஜ்ஹுட் என்ற விமானம் சரியாக 10-45க்கு கட்டுநாயக்காவில் தரை இறங்கியது.

சரியாக 10-55க்கு விமானத்தைவிட்டு இறங்கிய தேசாயை இலங்கைப் பிரதம மந்திரி திரு. ஆர் பிரேமதாசா முதலில் வரவேற்ருர்.

பிரதமர் திரு. பிரேமதாசா முதலில் கரம்குவித்ததும் பின்னர் கைலாகு கொடுத்தும் வரவேற்ருர்.

பிரதமரின் புதல்வன் செல்வன் சஜீத் அழகிய ரோஜா மலர்களால் ஆன மாலையை அணிவித்தார். திரு பிரேமதாசாவின் புதல்வி செல்வி துலாஞ்சலி நாவல் நிற 'ஓர்க்கிட்' மலர்களால் ஆன மலர்ச்செண்டை திரு. தேசாயின் மருமகள் திருமதி பத்மா பென் தேசாய்க்கு கொடுத்தார்

பின்னர் திரு தேசாய் செங்கம்பளத்திலிருந்து நடந்து வந்து கடற்படையினர் அளித்த அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். அணிவகுப்பு முடியும்வரை 'சலியூட்' அடித்தபடி நின்றவாறே அணிவகுப்பை ஏற்றுக்கொண்டார்

கடற்படையினரின் வாத்தியக்கோஷ்டியினர் முதலில் இந்திய தேசிய கீதத்தையும் பின்னர் இலங்கை தேசிய கீதத்தையும் இசைத்தனர்

[10-ம் பக்கம் பார்க்க]

## கண்டியில் மக்கள் மகிழ்ச்சி பொங்க வரவேற்பு

விவசாய காணி அமைச்சர் திரு. ஈ எல் சேனநாயக்கா அவரை வரவேற்ருர். அங்கு திரு. எஸ் தொண்டமான் திரு. ஜெனி டி மெல் ஆகியோரும் வந்திருந்தனர்.

பூங்காவில் ஞாபகார்த்தமாகப் பூச்செடி ஒன்றை திரு. தேசாய் நாட்டியபின்னர் கார் பவனியாக கண்டி ஜனதிபதி மாளிகைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்,

கார்ப் பவனி சென்ற வீதியின் இருமருங்கிலும் ஆயிரக்கணக்கான மக்கள் கூடிநின்று இந்தியப் பிரதமரை உற்சாகமாக வரவேற்றனர். (ம-இ)

நாட்டை எதிர்நோக்கும்

## பிரச்னைகள் தீர்வதற்கு மனப்பான்மை மாறவேண்டும்

### ஜனதிபதியின் சுதந்திரதினச் செய்தி

(கொழும்பு)

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள பிரச்னைகளைத் தீர்ப்பதாயின் வாழ்க்கையின் மீதும் சமுதாயத்தின் மீதும் நமக்கிருக்கும் மனப்பான்மைகளை மாற்றிக் கொள்ள வேண்டும். இல்லாதபட்சத்தில் எந்த அரசாங்கத்தினலும் இந்தப் பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளமுடியாது.

ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன சுதந்திர தினத்தையொட்டி நாட்டுமக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ஜனதிபதி மேலும் கூறியிருப்பதாவது: இன்றைய தினம் எமது நாடு சுதந்திரம் பெற்று 30 ஆவது நினைவு தினமாகும். இன்று நாம் எம்மையே கேட்டுக் கொள்ள வேண்டிய ஒரு வினா யாதெனில், கடந்த இந்த 30 ஆண்டுகளாக எமது நாட்டுச் சாதாரண பொது மக்களுக்கு இச் சுதந்திரத்தை நாம் அர்த்தம் நிறைந்த தொன்ருக ஆக்கிக்கொடுத்திருக்கின்ருேமா என்பதாகும்.

இக்காலப் பகுதியின்போது, வளர்முக நாடுகளுள் சனநாயக கோட்பாடுகளைத் தொடர்ந்தும் கடைப்பிடித்து வந்த ஒரு சில நாடுகளுள் நமது நாடு ஒன்ருக இருந்துவந்துள்ளது என்பதையிட்டுநாம் மகிழ்ச்சியடையலாம். மேலும் நம்நாட்டு மக்கள் தமது சுதந்திர வாக்குரிமைப் பிரயோ

(10-ம் பக்கம்பார்க்க)

## அமிர் சந்திப்பார்

[கொழும்பு]

இந்தியப் பிரதம மந்திரி திரு. மொரார்ஜி தேசாயை தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபர் திரு. அ. அமிர்தலிங்கம் சந்திப்பார். 5-ந் திகதி மாலை 3 மணிக்கு இந்திய பிரதமரை திரு. அமிர்தலிங்கம் சந்திப்பதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

[ம-இ]

## 'சொந்த உழைப்பின் மீதே எதிர்காலம் தங்கியுள்ளது'

### பிரதம மந்திரியின் செய்தி

[கொழும்பு]

எமது சொந்தக் கரங்களின் உழைப்பின்மீதே எமது வருங்காலம் தங்கியுள்ளது. இதனை நிறைவேற்றுவதற்குஇன்றைய தினம் நாம் உறுதி பூணுவோம் என்று பிரதம மந்திரி திரு ஆர். பிரெமதாச விடுத்துள்ள சுதந்திர தினச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் கூறியுள்ளதாவது:

உலகெங்கணும் எமக்கு நண்பர்கள் உளர் என்பது உண்மையே. அவர்கள் எப்போதுமே செய்துவந்துள்ளவாறு எமது முயற்சிகளில் தொடர்ந்தும் தாராளமாக உதவிவருவர் என்பதும் உண்மை. எனினும், நிறைவேற்றப்படவேண்டியுள்ள தான பணி எமதே. எமது சொந்தக்கரங்களில் உழைப்பின்மீதே எமது வருங்கால வளம் தங்கியுள்ளது. எனவே எமது இப்பங்கை நிறைவேற்றுவதற்கு நாம் இந்நாள் உறுதி பூணுவோமாக.

மனித சுதந்திரம், மனித கௌரவம் எனும் பண்புக

[10-ம் பக்கம் பார்க்க]

# இறியூனியன் தமிழ்பிரமுகர் இலங்கை வருகிறார்

(யாழ்ப்பாணம்)

இறியூனியன் தீவைச் சேர்ந்த தமிழ் பிரமுகரும் உலகத்தமிழ்ப் பண்பாட்டுக் கழகத்தின் துணைப்பொதுச் செயலாளர்களில் ஒருவருமான திரு. தேவகுமாரன் இலங்கை வரவிருக்கின்றார்.

இறியூனியன் தீவிலுள்ள தமிழர் நிலை பற்றி அவர் இங்கு பல இடங்களில் உரை நிகழ்த்துவார்.

உலகத் தமிழ்ப்பண்பாட்டு இயக்கத்தின் இலங்கைக்கிளை இறியூனியன் தமிழர் திருநாளைக் கொண்டாட நடவடிக்கை எடுத்து வருகிறது. இறியூனியன், பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளில் ஒன்று என்பதும் இத்தீவு தென்னாபிரிக்காவுக்கு அண்மையில் மடகாஸ்கருக்கும் மொறிசியசு தீவுக்கும் இடையிலுள்ள சின்னஞ்சிறிய தீவு என்பதும் தெரிந்ததே.

இத்தீவில் புலம் பெயர்ந்த தமிழ் வம்சாவளியினரான 1½ இலட்சம் தமிழர்கள் வாழ்ந்து வருகிறார்கள் என்பதும் தமிழை மறந்து விட்ட இம்மக்கள் ''கிரியோல்'' மொழி பேசி வருகிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

தமிழாசிரியர்களை அழைத்துச் சென்று இத்தீவில் தமிழ்ப்பாடசாலைகளை அமைத்துக் கொடுத்துத் தமிழ்க்கல்வியை ஆரம்பிக்கும் சாத்தியக் கூறுகள் பற்றியும் திரு.

[10 பக்கம் பார்க்க]

## காணி விற்பனைக்கு

கோண்டாவிலில்—தொழிற்சாலை கட்டுவதற்கோ தோட்டம் செய்வதற்கோ அல்லது வீடு கட்டுவதற்கோ ஏற்ற 28 1/2 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

விரும்புவோர் பின்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

இ. பாலசுப்பிரமணியம்
சட்டத்தரணி,
52, வைமன் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 334 (1539)


## உடன் விற்பனைக்கு

பிலிப்ஸ் TV- 18 அங். கலர்
விடியோ கஸெட் றெக்கோடர் N 1700
நீண்டநேரம் இயங்கக்கூடியது
6 கஸெட் (ஹிந்தி. ஆங்கிலப் பாடல்கள்)
லிக்குவிடைசருடன் கூடிய
கிறைண்டர்
றேடியோவுடன் கூடிய
கஸெட் றெக்கோடர்கள்
நைற் லாம்ப், ரைமர் சுவிட்ச், ஆகியவற்றுடன் கூடிய
மேசை மின் விசிறிகள்
பற்றறியில் இயங்கும் சுவர் மணிக்கூடு
வேறு பல பொருட்களுமுண்டு. சகல பொருட்களும் புத்தம் புதியவை. தொடர்பு:
திரு. சிவஞானம்
'ரட்னபதி', கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.
1540



இந்தியப் பிரதமர்
திரு. மொரார்ஜி தேசாயின்
இலங்கை விஜயம் சிறப்படைய
## எமது நல்லாசிகள்
இறக்குமதிசெய்யப்பட்ட பல பொருட்கள்
பெருமளவில் கையிருப்பிலுண்டு...
- ஜி. ஈ. சி. மின் விசிறிகள்
- விவசாய இரசாயன தெளிகருவிகள் (குரோமியம் பிளேட்டிங்)
- லண்டன் மாநகர எழிலரசிகளின் நறுமணம் கமழும் ரல்கம்பவுடர்
- பல்கன் பால்டின்

இன்னும் பல...
வர்த்தக விசாரணைகள்
## முகமதலி அப்துலலி
5 -- 7 பெரியகடை,
யாழ்ப்பாணம். போன்: 515


## பிறந்ததின வாழ்த்து



செல்வன் பிரதீப்

அம்மன் ரோட் 55-ம் இலக்க இல்லத்திலிருக்கும் எஸ். பி நடராசா தம்பதிகளின் புதல்வன் பிரதீப் தனது ஐந்தாவது பிறந்த தினத்தை இன்று குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அக்காமார், அம்மம்மா அப்பப்பா, மாமி ஆசைமாமா பெரியத்தான் குடும்பத்தினர், சின்னத்தான், இன்பா மாமா, சித்திமார், சித்தப்பா, ரஞ்சன்மாமா, அண்ணன்மார் அனைவரும் சகல கலைகளும் பெற்றுப் பல்லாண்டு வாழ்க என்று வாழ்த்துகின்றனர். 1548

## தேவை

பாக்கியம் வைத்தியசாலை புங்குடுதீவு கிளைக்கு அரசாங்கத்தில் இருந்து ஒப்வு பெற்ற Apothecary அல்லது Pharmacist உடனடியாகத் தேவை விண்ணப்பிக்கவும். பாக்கியம் வைத்தியசாலை, புங்குடுதீவு-1. 1533

தட்டெழுத்தாளர் (தமிழ்), பியோன் சான்றிதழ்களுடன் பி ப. 3-00 மணிக்கு நேரில் வரவும். சுப்பகனன் கொப்பி சேவிஸ், 13, நவீன சந்தை (மேல்மாடி), யாழ்ப்பாணம். 1537

யாழ்ப்பாணம் பெனின்சுலா கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகுவதற்கு 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட 7-ம் வகுப்பு சித்தியடைந்த ஆண்கள் தேவை. விரும்புவோர் 12-2-1979 அன்று பிறப்புச் சாட்சிப்பத்திரம், நற்சாட்சிப் பத்திரம் ஆகியவற்றுடன் நேரில் வரவும். 1524

கரைதுறைப்பற்றுப்
ப. நோ. கூ. சங்கம்
முல்லைதீவு
## கேள்விப் பத்திரம் வெற்றுச் சாக்குகள்

எமது சங்கத்தில் வெற்றுச் சாக்குகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் 20-2-79க்கிடையில் மேற்படி காரியாலயத்தில் வந்துபார்வையிட்டு சாக்கின் தரத்திற்கேற்ப விலைகளையும் குறிப்பிட்டு எம்மிடம் சமர்ப்பித்து முற்பணமாக ரூபா 25/-ம் கட்ட வேண்டும். தங்கள் கேள்விப்பத்திரங்கள் யாவும் பரிசிலனை செய்யப்பட்டு கூடிய கேள்விக்காரருக்கு சாக்குகள் வழங்கப்படும்.

பொதுமுகாமையாளர்.
1535

## காவற் பெருமை

-அரியாலையூர் வே. ஐயாத்துரை

காவற் கடமை கண்ணே உடைமை
சேவை பிடத்துச் செலுத்து திடமெல்
ஏவற் படியே ஏற்கும் கடமை
எவையென் றாலும் இயற்றுக இதமெய்

கண்ணே முதலாய்க் காவல் விரிக்கும்
காதை அயற்கண் காவல் பொருத்தும்
திண்மை உண்மை காவற் பெருமை
திருட்டு இலையேல் காவல் அருமை

வீரம் காரம் காவல் முறைமை
விழிப்பு வெளிப்பு காவற் செறிமை
நேரம் பாரம் காவற் திறமை
நீதி நிலைப்பு காவல் நெறிமை

அப்பன் ஆசான் அண்ணன் தம்பி
ஆதார வாலுயர் ஆரென் றாலும்
செப்பும் சட்டம் திட்டம் தவறின்
சிந்திக் காமற் செலுத்துக விதியை

சட்டப் படியைத் தாண்டா திருப்பின்
சார்ந்துள பணியால் தர்மமு மூண்டு
வட்டம் கண்டே வாயைப் பிளக்கின்
மனச்சாட் சிக்கண் வருதப் படுவாய்!

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கருகாமையில், பிரதான பாதைக்கருகில் 12 பரப்பு காணிவீட்டுடனும் வட்டுக்கோட்டை கிழக்கு தாவளையில் 10 பரப்பு மரங்களுடன் கூடிய வீட்டுக்காணியும விற்பனைக்குண்டு இரு நிலங்களுக்கும் ''ஜனனி'', 21, அம்மன் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் என்னும் விலாசத்துடன் பெப்ரவரி5-ம்,6-ம் திகதிகளில் நேரடியாக தொடர்பு கொள்ளவும். தொலைபேசி: 7833, யாழ்ப்பாணம. 1513

மிகவும் நல்ல நிலையிலுள்ள E N 9993 Ford Prefect 100 E மொடல் விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: Dr. T. குணரத்தினம், முல்லை நகர் கிளினிக், முல்லைத்தீவு 1522

6 ஸ்ரீ இலக்கத் தொடருடைய லம்பிறட்டா ஸ்கூட்டர் 150 D L (இத்தாலியன் மொடல்) உன்னத நிலையில்விற்பனைக்குண்டு. 4-2-79-ந் திகதி பார்வையிடலாம். ஆ. சிவயோகன், 16, கொன்வென்ற் வீதி, யாழ்ப்பாணம். 1521

150 DL இத்தாலியன் லம்பிரட்டா ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. றிச் கோப்பி பார், நவீனசந்தை, யாழ்ப்பாணம். 1530

யாழ். இந்துக் கல்லூரிக் கண்மையில் கே. கே. எஸ். ரோட் பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவிற் சந்தியிலிருந்து 40 யார் தூரத்தில் பிரப்பங்குள ரோட்டு முகப்புடைய காணி 1¾ பரப்பு விற்பனைக்குண்டு. தண்ணீர்ப் பங்குண்டு விலை மொத்தம் ரூபா 70, 000/- தரகர் போன்றோர் எவருமின்றி நேரடித் தொடர்பு கொள்க கே கே சோமசுந்தரம், விரிவுரையாளர், உடுவில் கிழக்கு, சுன்னாகம். 1459

தட்டாதெரு சந்திக்கு அருகாமையில் இருக்கும் கடைக்கட்டிடமும் மேல் அறையும் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு; ச. சடாச்சரம், 513, கே. கே எஸ், வீதி, தட்டாதெரு. யாழ்ப்பாணம் 1439

8 ஸ்ரீ சீரிஸ் மொரிஸ் மைனர் இங்கிலாந்தில் இருந்து இறக்குமதியானது, உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்ளவும் இராசரத்தினம், சிவன் கோயில் வீதி, சித்தங்கேணி 1532

## விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள EY Ford—10 கார் உடன் விற்பனைக்கு விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும். 'விஸ்வம்ஸ் பார்மஸி', சண்டிலிப்பாய். அல்லது 'ராஜா ஸ்ரோஸ்', சண்டிலிப்பாய். 1506

டாக்டர் பாவித்த நல்ல நிலையிலுள்ள 4ஸ்ரீ வாக்ஸ்வகன் (Volkswagen) காரும் சிசில் குளிர்சாதனப் பெட்டியும் (Sisil Refrigerator) விற்பனைக்குண்டு. டாக்டர் வெளிநாடு செல்வதால் உடன் தொடர்பு கொள்ளவும். 122B நாவலர்வீதி, யாழ்ப்பாணம். 1541

மொறிஸ் மைனர் 1000 பதிவு செய்யப்படாதது. அண்மையில் இறக்குமதி செய்யப்பட்டு உன்னத நிலையில் உள்ளது. பார்வையிடலாம். 26, இன்ரநாஷனல் புடிஸ்ற் சென்றர் ரோட், வெள்ளவத்தை. 1538

## பயிற்சி

வெல்டிங் (Electric Arc & Gas) இலெக்றிக் வயறிங், ரேடியோ (Transistor), Auto Electricians Certificate, Diploma in Building Technology முதலிய பயிற்சிகள், வெளிநாட்டு முறையில் நடாத்தப்படும். ஆங்கிலமும் முதலுதவிப் பயிற்சியும் இலவசம். National Institutes, 57, பாங்சோல் வீதி, யாழ்ப்பாணம். 1501

## கல்வி

குறுகியகால துரித போதனையும், பதிவுள்ள டிப்புளோமாவும் Radio Technics மின்சார தொழில் நுட்பம். விபரங்கள் முத்திரை உறையுடன் ஜே. ரி. எஸ், 53 (30), டேவிட் ரோட், யாழ்ப்பாணம். 1517

## மணிஓடர் யாருடையது?

யாழ் றீகல் தியேட்டருக்குள் கண்டெடுக்கப்பட்ட தந்தி மணி ஓடர் ஒன்று ஈழநாடு காரியாலயத்தில் தியேட்டர் மனேஜரால் ஒப்படைக்கப்பட்டுள்ளது உரியவர் அடையாளம் கூறி பெற்றுக் கொள்ளலாம்


நம்பிக்கையான நவநாகரிக தங்க, வைர நகைகள் வேண்டுமா?

# பொ. அம்பலவாணர்

தங்க, வைர நகை வியாபாரம்.
119, கஸ்தூரியார் ரோட், யாழ்ப்பாணம்.
போன்: 7199, தந்தி: வைரம்.

# ஒரு ஏக்கம் மடிகிறது!

## கோகிலா மகேந்திரன்

'அம்மா! நான் போகட்டோ?'

''ஏனடி அவசரப் படுகிறாய்? சரி, சரி, தேவையானதை எடுத்துக்கொண்டு போட்டுவா கெதியா!''

ஏழரை மணிக்கெல்லாம் நான் அங்கே நிற்கவேண்டும் என்ற அந்த வேட்கைக்கு நானே ஆயிரம் காரணங்கள் கூறிப் பார்த்துக் கொண்டபோதிலும்- எனக்குத் தெரியும் அந்தக் காட்சியில் எனக்குள்ள 'லயிப்பு'த்தான் காரணம் என்று

பனி மழையில் நனைந்திருக்கும் புற்கூட்டங்களைப் பார்த்துச் சிரித்தபடியே அந்த வீதியில் நான் ஓடிக்கொண்டிருந்தேன் ஏதேதோ புதிய கற்பனைகளும் கனவுகளும் நினைவுகளும் அலை அலையாய் நுரை நுரையாய் அடித்து ஆர்ப்பரித்துக் கரையை நோக்கி ஓடிவரும் கடல் அலைகள் கரையில் வந்து மோதிய பிறகு, ஒன்றுமில்லாமல் வெமறுனே திரும்பிச் செல்லும் காட்சி- கரையிடம் அடிவேறு வாங்கிக் கொண்டு திரும்பிச் செல்லும் காட்சி- ஏனோ என்னை அலைக்கழிக்கிறது பஸ்ஸைத் தவறவிட்டு விடுவோமோ என்ற சந்தேகம் கலந்த கேள்வி மனதில் ஒலித்துக் கொண்டிருப்பதால் ஒருவித மனப் பதைப்புடன் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறேன் அந்தச் சந்தடியும் கலகலப்பும் ஒவ்வொரு நாளும் பார்க்கப் பார்க்க அலுத்துப் போகாத காட்சிகள். அந்தப் பரவசத்தை தவறு விட்டு விடலாமா?

கிரிமலையின் ஐந்து வீதிகள் சந்திக்கும் அந்தச் சந்தியில் நிமிர்ந்து நிற்கும் தபால் பெட்டியில் நான் திரும்புகிற போது எனக்கு முன்னால் பட்டாம் பூச்சிகள்போல பல மாணவிகள் வந்து கொண்டிருக்கும் காட்சி- எப்போதும் போலவே இன்னும் பஸ் வரவில்லை என்பதை ஊர்ஜிதம் செய்கிறது.

'அங்கை பாரடி! நோஞ்சான் குஞ்சு ஓடிவருது!

''நாங்கள் தற்சமயம் பிந்தி வந்தாலும் நோஞ்சான் குஞ்சு கடைசிவரையும் பஸ்ஸைத் தவறவிடாது''

அவர்கள் என்னைப் பற்றியே கதைத்துச் சிரிக்கிறார்கள் என்பது எனக்குப் புரிந்தாலும் அவர்கள் பேச்சில் கலந்து கொள்வது என் வழக்கமில்லை. ஒவ்வொரு நாளும் பார்த்துப் பார்த்து அலுக்காமல் இன்றும் புருவங்கள் நெரிய அவர்கள் ஒவ்வொருவரையும் உன்னிப்பாகப் பார்க்கிறேன். மடிப்புக் கலையாத நேர்த்தியான வெண்ணிற உடை, நெற்றியில் புரண்டு விழும் சுருள் சுருளான மயிரைக் கலைக்காமலே தலைவாரி 'றிபன்' கட்டியிருக்கும் திறன், முழங்கால் வரை உயர்ந்து ஒரு தனிமிடுக்கைத்தரும் டெனிஸ் சப்பாத்து, சொக்ஸ், ஆடி அசையும் அந்த லாவகமான நடைக்கேற்ப நெஞ்சில் தாளமிடும் 'டை' தோளில் தொங்கும் விதம் விதமான 'ஸ்கூல்' பாக்ஸ்' எல்லாமே என்னைச் சிறங்க வைக்கின்றன, கொழு கொழு வென்ற உடலும் பூரிப்பு நிறைந்த முகங்களுமாய்க் கூடிச் சிரித்துக் கும்மாளமிட்டு வரும் அந்தக் கூட்டம். குச்சுக் குச்சாய் மெலிந்து ஒடிந்து விழுவது போல் இருக்கும் என்னைப் பார்த்து 'நோஞ்சான் குஞ்சு' என்று அன்புப் பட்டம் வைத்திருத்தல் ஒரு வித தவறுமில்லைத்தானே!

சன்னமாகத் தூற்றலடிக்கும் அந்த மழைத் துளிகளையும் பொருட்படுத்தாமல் அந்தக் கடை முகப்பில் போய் நின்று கொண்டு அவர்களைப் பார்க்கிறேன். மருண்டு மருண்டு பார்க்கும் அந்த என் விழிகளை ஓர் அதிசயம் போல் பார்த்துக் கொண்டு, விதமாகவும் அவர்கள் கதைப்பதை நான் ஆவலுடன் ஒட்டுக் கேட்கிறேன். எனக்குப் புரியாத சில ஆங்கில வார்த்தைகளையும் சேர்த்து அவர்கள் கதைக்கும் அழகு எனக்கு மிகவும் பரிச்சயமான ஒரு நிகழ்வாக இருந்தபோதிலும்-திரும்பத் திரும்ப அதைக் கேட்பது ஒரு சுகானுபவந்தான்!

''பஸ் வருதடி!'' என்று ஒருத்தி சொன்ன உடனே எல்லோரும் விழுந்தடித்து ஓடிப்போய் பஸ் திரும்பும் அந்த வளைவில் நின்று கொள்கிறார்கள். நான் மட்டும் அந்தக் கடைமுகப்பிலேயே நின்று கொண்டு தூரத்தில் பஸ் வரும் வேகத்தைப் பார்க்கின்றேன். மிக வேகமாக வந்து வளைவில் திரும்புவதற்காக, பஸ்ஸின் வேகம் குறைக்கப்படும்போது வளைவில் எதிர்பார்த்து நின்றிருக்கும் அந்தக்கூட்டம் அநாயாசமாக அதில் தொற்றி ஏறிக்கொள்வதும் ரசிக்கக் கூடிய ஒரு காட்சிதான்.

'பஸ் வந்தா நிற்கும்தானே! அதுக்குள்ளை ஏன் விழுந்தடிக்கிறியள்? என்று நடத்துநர் சீறியதையும் பொருட்படுத்தாமல் அவர்கள் எல்லாம் ஏறி முண்டியடித்துக் கொண்டு இருக்கைகளில் அமர்ந்து கொள்கிறார்கள். பஸ் சாரதியும் நடத்துநரும் தமது காலைச் சாப்பாட்டை முடித்துக் கொள்வதற்காக இறங்கிக் கடையினுள் நுழைந்த பிறகும் இவர்களின் சரளமான உரையாடலும், கூச்சலும், கலகலப்பும் ஓயவில்லை. திடீரென்று அவர்களில் ஒருத்தி, 'சின்னமாமியே உன் சின்ன மகளெங்கே?' என்று ஏதோ ஒரு உற்சாகத்தில் ஒரு வரி பாட- அதுமற்றவர்களிடமும் ஒரு உந்துதலை ஏற்படுத்தி விடுகிறது சில விநாடிகளில் பஸ்ஸின் சிற்றையே தாளமாகத் தட்டித் தட்டி, கைத்தாளமும் போட்டுக் கொண்டு அவர்கள் எல்லாம் பாடுவது அங்கே ஒரு ரஞ்சகமான சூழ்நிலையை உருவாக்குகிறது. 'டிங்கிரி டிங்காலே' பாட்டு இவர்கள் எல்லோரையும்வி- நான் என்ன ஜோராய்பாடுவேன் தெரியுமா? அவர்களின் அந்தக் கம்பீரம் கலந்த உற்சாகம் வழக்கத்திற்கு மாறாய் என்னுள் ஒரு ஆவலைக் கிளற நானும் பஸ்ஸினுள் மெதுவாய் ஏறிக்கொண்டு அந்தப்பாடலில் கலந்து கொள்கிறேன். வழக்கமாய் என்னை ஒரு அர்த்தமற்ற வெறுப்புடனும், அருவருப்புடனும் பார்த்து உதாசீனம் செய்யும் அந்தக் கும்பல் இன்று,

'அட, நோஞ்சான் குஞ்சு நல்லாப் படிக்குதே! இன்னும் படி' என்று என்னை உற்சாகப் படுத்துவது எனக்கு ஒரு வியப்பாய் தோன்றுகிறது, அந்த மகிழ்வில் நான் அமிழு முன்பே மற்றொருத்தி,

''என்னடி நோஞ்சான் குஞ்சு இண்டைக்கு ஸ்கூல் பஸ்ஸிலை ஏறிட்டுதே? படிக்க வருதோ?'' என்று கேட்பது, என் உள்ளுக்குள்ளே மறுகி மறுகி வெளிப்பட முடியாதிருந்த சோகத்தைக் கல்லெறிந்து கலக்கிவிடுகிறது அதே நேரம் சாப்பிடப் போயிருந்த சாரதியும் நடத்துநரும் திரும்பிவரவே அவர்களைக் கண்டபயத்தில் உள்ளார்ந்த குமுறலுடன் பஸ்ஸிலிருந்து திடுமெனக் குதித்து விடுகிறேன், அவசரமான அந்தக் குதிப்பினால் கணுக்காலில் ஏற்பட்டுவிட்ட சுளுக்கு வலிப்பதையும் பொருட்படுத்தாமல் ஒருவாறு என்னைச் சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்தபோது அந்த 'ஸ்கூல் பஸ்' போய்க்கொண்டிருக்கிறது, 'நோஞ்சான் குஞ்சு டாட்டா!' என்று பஸ் யன்னலினூடாக அவர்கள் தலையைநீட்டிக் கையை அசைத்துக்கூறிச் சிரிக்கும் போது. ஒருநாள் அவர்களில் ஒருத்தியின் 'டை'யைப் பிடித்துக்கொண்டு, 'இது எந்தக்கடையில் வாங்கின நீங்கள்?' என்று கேட்ட என் அசட்டுத்தனத்தையே இவர்கள் இன்னும் நினைத்துச் சிரிப்பது போல என்னுள் ஒரு கற்பனை விரிகிறது பஸ்ஸின் தோற்றம் சிறிதாகிச் சிறிதாகிக் கண்ணுக்கு எட்டிய தூரம் வரை சென்று மறையும் அழகைப் பார்த்து எனக்குள்ளே பெரிய ஒரு பெருமூச்சு வெடிக்கிறது.

இரண்டு வருடங்களுக்கு முன் வீட்டிலே நான் கடைக்

(8-ம் பக்கம் பார்க்க)



---

## இலக்கியத்துறையில் இளையதலைமுறை - 5

# உள்ளடக்கமே இலக்கிய உருவத்தை நிர்ணயிக்கிறது

## காவலூர் எஸ். ஜெகநாதன்

துப்பாக்கி
இரத்தம்
ஆ......
(கொட்டாவி)
கொர் கொர்
(குறட்டை)
விடிவு......
புதயுகம்
மலர்ந்தது...

இதுவும் ஒரு கவிதையாம். புதுக்கவிதை பத்திரிகையில் பெயர் வரவேண்டுமென்று விரும்புபவர்கள் கேள்வி பதில் பகுதியையோ அல்லது வாசகர் கடிதம் பகுதியையோ பயன்படுத்துவார்கள். கொஞ்சம் மிஞ்சிப் போனால் ஏதாவது துணுக்கு எழுதுவார்கள். அவர்களெல்லாம் புதுக்கவிதைதான் சுலபமான வழி என்று புறப்பட்டு விட்டது. புதுக்கவிதைத் துறையைப் பீடித்துள்ள சாபக்கேடு. வசனங்களை எழுதிவிட்டு இது கவிதை நான் கவிஞன் என்று கூறுவதற்குப் பலர் புறப்பட்டு விட்டது, அத்துறையின் வளர்ச்சிக்கான அறிகுறி அல்ல. இந்தப்போக்கு நீடித்தால் இந்த வசனங்கள் கவிதைகளே இல்லை என்று மக்கள் மனதை மூடிவிடுவார்கள்.

கவலைதரும் இந்த நினைவுக் கார் மேகங்களை விலக்கி நம்பிக்கை ஒளி பாய்ச்சும் சில படைப்புக்களும் வராமல் இல்லை. தேசபிதாவுக்கு ஒரு தெருப்பாடகனின் அஞ்சலி போதாதா மு மேத்தாவை நிலைநாட்ட... கவித்துவ ஆற்றல் படைத்தவர்கள் வசனத் தோற்றத்திலேயே அற்புதமான கவிதைகளைப் படைத்திருக்கிறார்கள்.

ஈழத்தில்...?

மண்டை பிளக்கும் வெய்யில். மருதானை தொழில் நுட்பக் கல்லூரியின் அருகிலே சந்திக்கிறேன் விடுவிடுவென்று என்னையும் 'இழுத்து'க் கொண்டு அவர் விரைந்தார் நடந்து... நடந்து... நடந்து சோனகதெருவரை வந்துவிட்டோம் ம...ம்... என்று கூறிக்கொண்டே நடந்து வந்த எனக்கு மூச்சிறைக்கிறது. அவருக்கு? மூச்சு விடாமல் கதைத்துக் கொண்டே வந்த அவருக்கு களைப்பே இல்லை. இன்னும் பல மைல்கள் வாய் ஓயாமல் இலக்கியம் பேசிக்கொண்டு வர அவர் தயார், என்பார்வை வியப்போடு அவரை ஊடுருவுகின்றது

''இதுதான் இலங்கை மேமன் சங்க காரியாலயம்''

அவரோடு நுழைகிறேன்.

அங்குமிங்குமாக பத்திரிகை, சஞ்சிகைகளிலே பன்னீர்த் துளிகளாக புதுக் கவிதைகளைப் பொழிந்துகொண்டிருக்கும் மேமன் கவியும் நானும் எதிரெதிராக அமர்ந்து கொண்டோம்.

மேமன் கவியின் இயற் பெயர் ஏ. கே. ஏ. ரஸ்சாக். மாவெள்ளை நிறம். குழந்தைத் தனம் நிரம்பிய முகம். இரு பத்துமூன்று வயதே நிரம்பிய இந்த இளைஞருக்கு இலக்கியம் என்றால் போதும் உலகத்தையே மறந்து விடுவார்.

1947 ம் ஆண்டளவிலே குடும்பங்களாக இந்திய உத்தரப்பிரதேசத்திலிருந்து வந்து சேர்ந்த மேமன் இனத்தவர்களுக்கென்று சொந்தமான மொழி மேமன் மொழி. ஆனால் அந்த மேமன் மொழிக்கு எழுத்துக்கள் இல்லை. அந்த சமூகத்தின் பிரதிநிதியான ஒருவர், அதுவும் கொழும்பிலே வர்த்தகத்தில் ஈடுபட்டிருப்பவர் தமிழ் இலக்கியத் துறையிலே உற்சாகத்துடன் பணியாற்றி வருகிறார் என்றால். மூக்கில் கைவைக்கவேண்டிய சமாச்சாரம்தான்.

ஏன் புதுக்கவிதைகளைமட்டும் எழுதுகிறீர்கள். மரபுக் கவிதைகளையும் எழுதலாமே? என்று கேட்டேன். இலக்கிய உருவத்தை உள்ளடக்கம் தான் நிர்ணயிக்கின்றது. எனது கவிதைகளின் உள்ளடக்கங்கள் புதுக்கவிதையில் கூறும்போதே அழகுபெறுவதாக நான் கருதுகின்றேன் என்றார்.

1974-ல் எழுதத் தொடங்கியவர் மேமன்கவி. 'தமிழே என் மூச்சு அதுவே என்பேச்சு. கொள்கைதனை உடன் உடலில் பாய்ச்ச'... இப்படிப்போகிறது சுதந்திரனில் வெளிவந்த இவரது முதல் கவிதை இவரது கவிதைகள் தமிழகத்திலிருந்து வெளிவரும் கணையாழி, குயில் 'கஙய' போன்ற சஞ்சிகைகளிலும் பிரசுரமாகியுள்ளன. வானொலியிலும் பல கவியரங்குகளை நடத்தியுள்ளார்'

மேமன் இனத்தின் மீது கொண்ட பற்றால் தனது புனைப்பெயரையே மேமன்கவி என்று வைத்துக்கொண்டார் மேமன் இனத்திலிருந்து உருவான



மேமன் கவி

முதல் தமிழ் எழுத்தாளன் நானே என்று அவர் மார் புயர்த்தும் போது பார்க்க வேண்டுமே. எதிர்காலத்தில் தனது இனத்திலிருந்து பல எழுத்தாளர்கள் தோன்ற வேண்டுமென்பதும் அவரது ஆசை. தமிழ் இலக்கியத்தை தனது சமூகத்தவர்களிடம் பரிச்சயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

எனது பேனா என் மனச் சாட்சிக்கு மாறாக சமூகத்துக்குத் தீங்கு விளைவிக்கின்ற எந்தவொரு கொள்கைக்கோ எந்தவொரு இயக்கத்துக்கோ பயன்படாது என்கின்ற மேமன் கவி தனது கவிதைகளிலேயே தனக்கு மிகவும் பிடித்தது யாத்திரை என்ற புதுக்கவிதை என்கிறார் எங்கள் வாப்பா மரணித்துவிட்டார் என்று தொடங்குகிறது அக் கவிதை.

76ஆம் ஆண்டு 'யுகராகங்கள்' என்ற புதுக்கவிதைத் தொகுப்பு கூட்டுறவுப் பதிப்பகத்தின் மூலம் வெளிவந்தது அதிலுள்ள பலவற்றை நான் சாடியபோது...வர்க்கப் பிரச்சினை மட்டுமே என்று 76-க்கு முன் பாடினேன் அது தவறு என்று இப்போது புரிகின்றது இன்று எல்லாப் பிரச்சினைகளிலும் எனது பார்வைகளை விரித்து எழுதுகின்றேன் என்றார்.

சூனியம் அவரது ஒரு கவிதை?

நினைவுகள் இப்படியே
சுருங்கினால்
நான்—
சூனியமாகிவிடுவேன்.

இதையே-நினைவுகள் இப்படியே சுருங்கினால் நான் சூனியமாகிவிடுவேன் என்று எழுதினால் என்ன? இது கவிதையா? அப்படியென்றால் அச்சுக்கோப்பாளர்கள் எல்லாருமே புதுக்கவிதையாளர்கள் ஆகிவிடலாமே... இந்தவேளையில் சுரதாவின் கவிதையையே கம்போசிட்டர் கவிதை என்று 'சோ' சாடியதும் ஆனந்த விகடனில் எழுந்த பலமான வாதப்பிரதிவாதங்களும் என் நினைவுக்குவருகின்றன. இங்கேயும் ஒரு 'சோ' இல்லாதது இவர்களுக்கு வாசியோ?

பல மரங்களின் கூட்டங்களைப் பார்க்கும்போது தனித்த ஒன்று மனதைத் தாக்காது. தனியாக ஒன்றைக்காட்டும் போது அது மனதில் பதியுமல்லவா? வார்த்தைகளைத் தனித்தனியாக படிகள் ஆக்கும்போது தான் மனதைத்தொட்டசைக்கிறது. அப்படி வார்த்தைகளை அடுக்க கவிஞனால்தான் முடியும் என்று விளக்கமளிக்கிறார் மேமன்கவி.

ஓவியத்திலே இவருக்கு தனியான ஓர் ஈடுபாடு கொழும்பில் எந்த மூலையிலே ஓவியக் கண்காட்சி நடைபெற்றாலும் அங்கே மேமன் கவியைக் காணலாம் இலக்கியம் எனக்குப் பொழுதுபோக்கல்ல என் ஆத்மாவுக்கு உணவு என்கின்ற இவர் எனக்கு வழிகாட்டிகள்

(9-ம் பக்கம் பார்க்க)

## ஏட்டிலிருந்து-3

# நீர் அற்ற புலமும் கார் பெற்ற புலமும்

களவொழுக்கம்: தலைவன் நாள்தோறும் இரவில் வருகின்றான் வைகறையில் சென்றுவிடுகிறான். இருந்தாலும் தலைவிக்கு துன்பமாயிருக்கிறது; திருப்தியில்லை. இரண்டுவிதமாக அவள் பயப்படுகிறாள். நள்ளிரவிலே துணையின்றித் தனியே தன்னைக் கூடவருகிறான். அப்படி வரும்போது அவனுக்கு நேரிடக்கூடிய விபத்துக்களை நினைத்துப் பயப்படுவது ஒன்று; மற்றது, தங்கள் களவு ஒழுக்கத்தை எத்தனை நாளைக்கென்றுதான் மற்றவர்களிடமிருந்து ஊராரிடமிருந்து மறைத்து வைக்க முடியும்? உலைவாயை மூடினாலும் ஊர்வாயை மூடமுடியாது. தங்கள் களவு ஒழுக்கத்தை ஊரார் விரைவிலேயே அறிந்து அவள் மீது பழிகூறுவார்கள். இது இரண்டாவது பயம்.

களவு ஒழுக்கத்தில் காதலன் வந்துபோகின்ற திருப்தி-மகிழ்ச்சி தலைவிக்கு ஏற்பட்ட போதிலும், அதே சமயத்தில் அவன் படும் துன்பத்தையும் தோழி அறிந்துகொண்டாள். தலைவியின் துன்பத்தை நீக்கி விடுவதற்குவழி திருமணம்-அதுவும் விரைவில் நடக்க வேண்டும். தோழி தலைவனைத் தனிமையில் கண்டு, தலைவி படும் துன்பங்களை விளக்கி, அவன் அவளை மணந்து கொள்ள வேண்டுமென்று வற்புறுத்துகிறாள். அதுவும் என்ன மாதிரி வற்புறுத்துகிறாள்! தருக்க சங்கிரகம்படித்தமேதை போல, தனது நியாயங்களை உவமான உவமேயங்களுடன் தலைவனுக்கு எடுத்து விளக்கி வற்புறுத்துகிறாள். தோழியின் வாதங்களைக் கேட்டு தலைவனும், திருமணம் பேசுவதற்காக, நல்ல நாள் பார்த்து வந்தான்.

இந்த நல்ல செய்தியைத் தலைவிக்கு எடுத்துக் கூறுகிறாள் தோழி. தலைவனைச் சம்மதிக்க வைப்பதற்கு தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளையும் ஒரு பாடலாக உரைக்கிறாள்.

'இமையவில் வாங்கிய ஈர்ஞ்
சடை அந்தணன்
உமையமர்ந்து உயர்மலை
இருந்தனன் ஆக,
ஐயிரு தலையின் அரக்கர்
கோமான்
தொடிப்பொலி தடக்கை
யின் கீழ்ப்புகுத்தும்
மலை
எடுக்கல் செல்லா துழப்ப
வன் போல'

இமயமலையை வில்லாக வளைத்தவனும், (கங்கையைச் சடையிலே அணிந்தபடியினால்) குளிர்ச்சி பொருந்திய சடையையுடையவனும், அருட்குணங்கள் உடையவனுமாகிய இறைவன், உமை ஒரு பாகனாக உயர்ந்த கைலையங்கிரியில் வீற்றிருக்க, பத்துத்தலைகளை உடையவனும், அரக்கர்களின் அரசனுமாகிய இராவணன், வீர வளையல்கள் அணிந்த தனது கைகளினாலே, அந்த மலையை பெயர்த்து எடுக்க எண்ணி, மலையின் கீழே அவற்றைச் செலுத்தியும், அந்த மலையை எடுக்க முடியாது வருந்துகின்றவனைப் போல—

இராவணனுக்கும் இரண்டு வருத்தம்; இறைவனையும் உமையையும், மலையுடனே பெயர்த்தெடுத்து செல்ல முடியவில்லையே என்று ஒரு வருத்தம்; மற்றது, மலையின்கீழே செலுத்திய தனது வீரக்கைகளைத்தானும் எடுக்க முடியவில்லையே என்ற வேதனை! பாவம் இராவணன்; ஆப்பிழுத்த குரங்கின் கதை தெரியுமல்லவா?

இராவணன் வருந்துவதைப் போல யானையும் வருந்துகிறது-தொடர்ந்து படியுங்கள்;

'உறுபுலி உருஏய்ப்பப்
பூத்த வேங்கையை
கறுவுகொண் டதன்முதல்
குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக்
கூஉய்ததன்
கோடுபுய்க்க கல்லாது உழக்
கும் நாடகேள்!'

தலைவியின் துயரைத் தலைவனிடத்திலே எடுத்துக்கூறத் தொடங்கிய தலைவி, பெரிய பீடிகையுடன், தலைவனின் மலைநாட்டைப் பிரமாதமாக வர்ணித்து விட்டுக் கதையை ஆரம்பிக்கிறாள்.

வலிமையே உருவமான புலியின் உருவத்தைப் போல, வேங்கைமரம் பூத்திருக்கிறது. புலியின் மீது கொண்ட பகைமையினால், புலியைப் போலப் பூத்திருந்த வேங்கை மரத்தைப் புலிதான் என்று நினைத்து, வேங்கைமரத்தின் அடியிலே தன் தந்தங்களினால் மதம் மிகுந்த யானை குத்துகிறது. அதன் தந்தங்கள் வேங்கை மரத்தின் அடியிலே பூரணமாகப் புதைந்து விட்டன. அதன் பின்புதான் யானைக்கு உண்மை புலனாயிற்று. அது புலியல்ல வேங்கை மரம்) என்று தெரிந்து கொண்டு, தனது தந்தங்களை மீண்டும் வெளியே எடுக்கப் பாடுபடுகிறது. முடியவில்லை. நீண்ட பெரிய மலைப் பிளவுகளில் எல்லாம் எதிர் ஒலிக்கும்படி அலறுகிறது, அவதிப்படுகிறது. பாவம், இராவணனைப்போல, இந்த யானையும் தனது முயற்சியில் வெற்றி பெறாதது மட்டுமல்ல; தனது கொம்புகளையும் வெளியே எடுக்க முடியாமல் வேங்கையிடம் சிறைப்பட்டுக் கதறுகிறது அப்படிப்பட்ட மலைநாட்டுத் தலைவனே, கேள்-என்று தலைவி கூறுகிறாள்.

கேள் என்றால் மிகக் கவனமாகக் கேள் என்று அர்த்தம். இத்தனை பீடிகைக்குப் பின் வருவது, மிக முக்கியமான விஷயம்: இந்தக் காதால் கேட்டு அந்தக் காதல் விட்டு விடக்கூடிய சாதாரண விஷயமல்ல; இருகாதுகளாலும் கேள் என்று தோழி கூறுகிறாள். அந்தணன் அமர்ந்திருந்த மலையைப் பகையாக நினைத்து இராவணன் துன்பமுற்றதைப் போல, நிழலைத் தரும் வேங்கையைப் பகையாகக் கருதியானை இன்னல் படுகிறது. "ஆரிடை என்னாய்நீ அரவஞ்சாய் வந்தக்கால் நீரற்ற புலமேபோல் புல்லென்றாள்; வைகறை கார் பெற்ற புலமேபோல் கவின் பெறும்; அக்கவின் தீராமற் காப்பதோர் திறனுண்டேல் உரைத்தைக்காலை!'

அரியவழி; கடத்தற்கு அரிய வழி என்று எண்ணாமல், அவ்வழியே சஞ்சரிக்கும் பாம்புகளுக்கும் பயப்படாமல் நீ தலைவியைச்சந்திக்க வருகிற போது, அவள் அழகில்லாதவளாக, வாடிய புல்லைப் போலக் காணப்படுகிறாள். நீர் இல்லாத வரண்டு போன நிலத்திலே காணப்படும் பயிரைப்போல. அழகை இழந்து வாடிய தோற்றத்துடன் காணப்படுகிறாள்; ஆனால், வைகறையானதும், மனழ நிறையப் பெய்யப் பெற்ற நிலத்தில் உள்ள பயிரைப் போல, பசுமை பெற்று, அழகோடு பூரிப்போடு காணப்படுவாள். இதற்குக்காரணம் உனது அன்புதான் இரவிலே நீ வரும்போது நீவருவாயோ மாட்டாயோ என்ற தவிப்பிலும் வரும்போது வழியிலே உனக்கு இடையூறுகள், இன்னல்கள் நேர்ந்து விடுமோ என்ற பயத்திலும். வாடிப்போய் அழகை இழந்து காணப்பட்ட தோழி, நினது அன்பினால், காலை நேரத்தில், நீபோகும் சமயத்தில், மிக அழகுள்ளவளாகத் திகழ்கிறாள், இந்த அழகு, மறைந்து போகாமல், நிரந்தரம் நிலைபெற ஒரு வழியுண்டானால், அது என்ன வழி என்றுசொல்-

இப்படித் தோழி கேட்கிறாள். தலைவன் உடன் இல்லாமையால் அழகை இழக்கிறாள் தலைவி அவன் அவளுடன் இருந்தால் அழகைப் பெறுகிறாள், இந்த அழகு, இப்படி அடிக்கடி தேய்ந்தும் வளர்ந்தும் பூரணமாகியும்- மாறுபடாமலும் என்றும் ஒரே தன்மையாக நிலத்திலிருக்க ஏதாவது வழிஉண்டானால் அதனைச் சொல் என்றாள் தோழி. மணந்து கொண்டால் மட்டுமே தலைவன் தலைவியுடன் எந்நேரமும் உடன் இருக்கலாம். இந்தப்பதிலைத் தலைவனின் வாயிலிருந்து வரவழைக்க முயல்கிறாள்.

'இருளிடை என்னாய்நீ இர
வஞ்சாய் வந்தக்கால்
பொருளில்லான் இளமை
போல் புல்லென்றாள்'
வைகறை:
அருள் வல்லான் ஆக்கம்
போல் அணி பெறும்;
அவ்வணி
தெருளாமற் காப்பதோர்
திறனுண்டேல்
உரைத்தைக் காண்!

இருண்டவழி என்று நீ எண்ணாமல் இரவுக்கும் பயப்படாமல் வரும்போது, செல்வம் இல்லாதவனுடைய இளமை எப்படிப் பாழ்பட்டுக் கிடக்குமோ அதுபோல இவளுடைய அழகும் பொலிவின்றிப் போய்விடுகிறது. ஆனால் இவளுடன் தங்கி அன்பு செலுத்தி, நீ வைகறையில் செல்லும்போதோ, பிறருக்கு, கைமாறு கருதாமல் உதவுகிறவன் மனநிறைவையும் மிகுந்த மகிழ்ச்சியையும் பெறுவது போலவும், அவனது செல்வம் பன்மடங்கு அதிகரிப்பது போலவும், இவளும் எழில பெறுகிறாள். இவளது எழில் பன்மடங்காக ஜொலிக்கிறது. உனது அன்புக்கு உதவியதால் இவள் எழில் மேலும் அதிகரித்தது இப்படிபெற்ற அழகு, களவொழுக்கத்தினால், கள்ளக் காதலினால கிடைத்தது தானே என்று பிறர் சந்தேகிக்காதபடி, நிரந்தரமான எழிலாக இதனைக் காத்துக் கொள்ள ஒரு வழி உண்டானால் சொல்!

கைமாறு கருதாமல் பிறருக்கும் கொடுப்பவனுக்கு மனநிறைவும் மனமகிழ்ச்சியும் ஏற்படுவது மட்டுமன்றி, அவனது செல்வமும் மேலும் அதிகரிக்கும் இவளும் கைமாறு கருதாமல் உன்மீது கொண்ட அன்பினால் தன்னை உனக்கு ஈந்தாள் அதனால் இவளது அழகு, மேலும் பொலிவு பெற்றுப் பன்மடங்கு அதிகரித்தது. இந்த அழகை இதே பூரண நிலையில் வைத்துக் காப்பாற்ற ஒருவழி திருமணம்; நீ இவளைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டும் என்ற சயநலமான, கைமாறு கருதும் நோக்கத்துடன், இவள் தன்னை உனக்குத் தரவில்லை. ஆனால், இவளது அழகு நிலைத்து நீடித்திருப்பதையே நீ விரும்புவாய். அதற்கு ஒருவழி உண்டானால் சொல் என்று தலைவனிடம் கேட்கிறாள் தோழி

'மறந்திருந்தார் என்னாய்நீ
மலையிடை வந்தக்கால்
அறஞ்சாரான் மூப்பேபோல்
அழிதக்காள்; வைகறை,
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்
போல் திருத்தகும்;
அத்திரு

[9ம் பக்கம் பார்க்க[

நச்சினார்க்கினியன்

---

# ஓர் எழுத்தாள நண்பரின் ஏக்கம்!

ஒரு எழுத்தாளர் நண்பர் வந்தார். "எப்படி சேர், பார்த்து வெகுநாளாகிவிட்டது. சுகமாக இருக்கிறீர்களா?" என்று நான் மாமூல் படி கேட்டுவைத்தேன்.

மேசை நிறைய கடதாசிக் குப்பை. அவ்வளவையும் இன்று பார்த்துத் திருத்தி முடித்தாகவேண்டும். இடையில் இப்படி அவர்கள் வந்து கதைகொடுத்து விட்டால் அந்தஅன்றைய வேலை முடிந்த மாதிரித்தான்.

"சுகத்துக்கு என்ன சேர், குறைச்சல், எங்களைப்பற்றியெல்லாம் உங்கள்மாதிரி இருக்கிறவர்கள் கவனித்தால் தானே!"

"கவனிக்காமல் என்ன! நீங்கள் எழுதுகிறதை மாத்திரமே தொடர்ந்து பேப்பரிலே போட்டுக்கொண்டு வரவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள். உங்களைப்போல பலரும்தான் எழுதுகிறார்கள். அதுவும் இளைஞர்கள் இந்தக் காலத்தில் மிக வேகமாக எழுதுகிறார்கள். இவர்கள் எல்லாருக்குமே இடம்கொடுத்தாகவேண்டும். உங்களையும் நாங்கள் அப்படியே கைவிட்டு விடவில்லையே அவ்வப்போது நீங்கள் எழுதி அனுப்புவதை பிரசுரிக்க முடியாவிட்டாலும் படித்துப்பார்க்கவாவது செய்கிறோம்தானே!"

"அதுகிடக்கட்டும் சேர், நானும்தான் ஒரு குறிப்பிட்ட காலமாக எழுதிவருகிறேன். என்னைப்பற்றி ஒரு குறிப்பு, ஒரு பேட்டி இப்படி ஒன்றைப் பிரசுரிக்கக் கூடாதா! அப்போதாவது இந்த வாசகர்கள் நம்மைப் பற்றி கொஞ்சம் தெரிந்து கொள்ளவாய்ப்பேற்படுமே!"

இப்படிக் கூறிக்கொண்டே கையோடு கொண்டுவந்திருந்த ஒரு காகிதக்கட்டை எடுத்து மேசையில் போட்டார் நண்பர். கூடவே ஒரு பாஸ் போர்ட் அளவு அவருடைய புகைப்படமும் இருந்தது. "முடியுமானால் அதையும் ஒருபுளக் செய்து போட்டுவிடுங்கள்" என்றார்.

"என்ன இது? கதையா, கட்டுரையா?"

"அப்படி ஒன்றுமில்லை. 'என்னைப்பற்றியஒருகுறிப்பு'. இதையும் பிரசுரிக்காமல் போனால் நீங்கள் பத்திரிகை நடத்தி என்னதான் பிரயோசனம்."

நண்பர் கொஞ்சம் சூடாகவே பேசினார்

எனக்குத் தெரியும் இவர் எப்படி எழுத்தாளர் ஆனார் என்பதுபற்றி, ஆனால் இப்போது மனிதன் உண்மையாகவே சற்று ஆழமாகவே எதையும் எழுதுகிறார். பேசுகிறார் என்பது என்னவோ உண்மை தான்.

ஆரம்பத்தில் ஆசிரியருக்குக் கடிதம்என்றுஎழுதிக்கொண்டிருந்தார். பொது விஷயங்கள், மக்களுக்குத் தேவையான விஷயங்களைப்பற்றி குரல் எழுப்புவனவாக இருந்தமையால் பத்திரிகையில் அவ்வப்போது பிரசுரித்தோம். அடிக்கடி ஒரே பேரில் போட வேண்டாம் என்று கூறி ஒரு புனைபெயரையும் தந்தார். அவர் சொன்னதில் நியாயம் இருந்ததால் அதனையும் ஒத்துக்கொண்டோம், ஒரே சமயத்தில் ஒரே கடிதத்தைப் பல பேப்பர்களுக்குஅனுப்பிப் பிரசுரிக்கச்செய்து பெருமைப் பட்டுக்கொண்டார். இப்படித்தான் ஆரம்பித்தது அவர் எழுத்துலகப் பிரவேசம்.

பிறகு கதைகள், கட்டுரைகள் ஏன் கவிதைகள் என்று கூடக் கொண்டுவந்தார். பார்த்துப் பிரசுரிக்கக்கூடியவைகளை பிரசுரித்தோம் விடவில்லை ஆசாமி, ஒருநச்சரிப்பு.

தனது ஆக்கங்களே பிரசுரமாகவேண்டும் என்பதுபோலவும் வாசகர்கள் மத்தியில் தமது ஆக்கங்களுக்கு அதிக செல்வாக்கு ஏற்பட்டுவிட்டது போலவும் அவை பிரசுரமாகாவிட்டால் எங்கள் பத்திரிகைக்கே ஆபத்து ஏற்பட்டு விடும் என்பதுபோலவும் பேச ஆரம்பித்தார்.

வாசகர் இவரைப்பற்றி எவ்வளவு தெரிந்துவைத்துக் கொண்டார்கள் என்பதுபற்றி எமக்குத்தெரியாது. ஆனால் பத்திரிகைக்காரர்கள் மத்தியில் இவரைப்பற்றித்தெரியாதவர்கள் இருக்கமுடியாது.

ஒரு பத்திரிகையா, இரு பத்திரிகையா, நாளிதழ், வார இதழ், மாத இதழ், அரசியல், சமய இதழ் என்று ஒன்றையும் விட்டுவைக்கவில்லை. பத்திரிகைக்காரர்கள் எல்லாரையும் காக்காய்பிடித்து எல்லாவற்றிலுமே தமது படைப்புக்களை வெளிவரச்செய்தார்.

பாவம், எவ்வளவுகாலம் தான் இப்படி எழுதிக்குவிப்பது. எதிர்பார்த்தபடி புகழும் வரவில்லை, பணமும் வரவில்லை.

புதுக்கவிதை, புதுப் பரிசோதனைகள் என்று ஏதோ ஆரம்பித்தார். இவைகளை சிறு நூல்களாகவும் அச்சிட்டு வெளியிட்டார்,

இந்த இரசிகப் பெருமக்கள் இருக்கிறார்களே, இவர்களைப்போல பொல்லாதவர்கள் எவருமே இல்லை.

இலக்கியத்துக்காக ஒரு மனுஷன் தன்னையே அழித்துக்கொள்கிறான். ஆனால் அவனுக்கு ஆதரவு கொடுப்பதில்லை இவர்கள்.

இந்த நாட்டு, இலக்கியம், கலை, கலாசாரம் அப்படி-இப்படி என்று பலரும்தான்கத்திப் பார்த்துவிட்டார்கள். விமானத்தில் வந்திறங்கும் பொம்மை சினிமா இதழுக்கு 12 ரூபாய் கொடுத்துவாங்கும் இளம் பெண்கள் எத்தனை பேர் இந்த ஏழை எழுத்தாளன் எழுதித்தள்ளும் ஒரு கதையை - ஒரு கவிதையை வாங்கிப்படிக்க முன்வருகிறார்கள்?

நாடு-சுதந்திரம் - பொருளாதாரம் என்றெல்லாம் வானளாவப் பேசப்படுகிறது. உள்ளூர் சரக்குக்கு மதிப்பளிப்பார் இல்லை பிறகு உள்ளூர் பொருளாதாரம் வளர்வது எங்கே?

ஆட்சியிலிருப்பவர்களையே இதற்கு குறை கூறிக்கொண்டிருந்தால் எப்படி - மக்கள் மனதில் இந்த உணர்வு ஏற்படவேண்டுமே!

நண்பர் கொடுத்துவிட்டுப் போன காகிதக்கட்டு அப்படியே இருக்கிறது. பிரசுரிக்கும் படியாகவுமில்லை. பிரசுரிக்காவிட்டால் ஆசாமி சும்மாவும் இருக்கமாட்டார்.

முழுக்க வயிற்றெரிச்சல் தான்

அடிக்கடி டெலிபோன் செய்கிறார்-இடைக்கிடை கடிதமும் போடுகிறார். எப்படியோ அது பிரசுரமாகும் என்ற நம்பிக்கை அவருக்கு!

அந்த வகையிலாகுதல் அவருக்கு ஒரு திருப்தி ஏற்படட்டுமே!

ஒரு மாதிரி பார்த்து பிரசுரித்தால் ஆயிற்று.

நானும் அவரது வர்க்கத்தில் ஓர் அங்கம்தானே!

வர்ணம்

# நம் நாட்டு புடைவைகள் தரமானவையாய் இருந்தால் நம் மக்களும் அவைகளை ஆதரிக்கவே செய்வார்கள்!

## தரமான புடைவைகளை உற்பத்தி செய்தால் மக்களைக் கவரலாம்

அரியபுத்திரன் அரியசேகரன்

நமது நாட்டில் உற்பத்தியாகும் பருத்தி, செயற்கைப் பட்டு, இயற்கைப்பட்டு, சிந்தெட்டிக், புடவை வகைகள் நம்நாட்டு உள்ளூர் பாவனையாளர்களுக்கே போதாமையாக இருப்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதே நேரத்தில் நம் நாட்டு மக்கள் ஏன் வெளிநாட்டு புடவை வகைகளை நாடுகிறார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்ப்போமாளுல்-விடை புரிந்துவிடும். நமது நாட்டில் புடவை உற்பத்திக்குப் போதியளவு மூலப்பொருட்கள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் அதே நேரத்தில் நமது அரசாங்கம் போதியளவு மூலப்பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதிசெய்ய வழி வகுத்துத் தரும்போது நாம் ஏன் தரம்கூடிய புடவை வகைகளை இங்கு உற்பத்தி செய்யமுடியாது? இதை நாங்கள் ஏன் முயற்சித்தும் பார்க்க முடியாது? என எங்களிடம் கேள்வி எழுகின்றதல்லவா?

வீட்டிற்கு வீடு, தெருவுக்குத் தெரு, ஊருக்கு ஊர், கைத்தறிகளையும், மின்தறிகளையும் (Power Looms) செப்பமிடும் இயந்திரங்களையும் (Finishing Plant) போட்டால் மட்டும் போதாது, குடிசைக்கைத் தொழில்களைச்சரி, பெரிய தொழிற்சாலைகளைச்சரி அரசாங்கமோ, கூட்டுத்தாபனங்களோ, தனி நபர்களோ ஆரம்பிக்கும்போது, இதனால் நமது நாட்டு மக்களும் எவ்வளவு பயனடைகிறார்கள் என்பதைச் சற்று சிந்தித்துப் பார்க்கவேண்டும். நூறாயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுத்துவிட்டோம் என்ற நிம்மதியோ அல்லது நூறு ஆயிரம் ரூபாய்களைச் சம்பாதித்துவிட்டோம் என்ற எண்ணமோ இருக்கக்கூடாது. இப்படியான தொழிற்சாலைகளை ஆரம்பிக்கும் போது இதனால் மக்கள் எவ்வளவு பயனடைய முடியுமென்பதையும், நாடு எவ்வளவு முன்னேற முடியுமென்பதையும் உணரவேண்டும். இன்று நீங்கள் ஒவ்வொரு புடவைக் கடைகளுக்கும் சென்று பார்ப்பீர்களானால் நிலைமை புரியும். எவ்வளவு வெளிநாட்டுப்புடவை வகைகளை மக்கள் விரும்பி-ஆனால், பணம் கொடுக்கும் போது தயங்கி வாங்குகிறார்கள் என்பதை அறியலாம். ஏன் அப்படியான தரம்கூடிய புடவை, சேட், சட்டைத் துணிகளை இங்கு உற்பத்தி செய்து, ஏனைய உள்ளூரில் உற்பத்திசெய்யும் புடவையைப் போல கட்டுப்பாட்டு விலைக்கு விற்க முடியாதா? என்றுதோன்றுகின்றதல்லவா? முடியும். முடியாது என்பதை முயற்சிசெய்து பார்த்தால் தான் தெரியும். நாங்கள் எவ்வளவு புடவை உற்பத்தியைப் பெருக்க முயல்கிறோமோ-அவ்வளவுக்கு அதன் தரத்தையும் கூட்டவேண்டும். சுருக்கமாகச் சொல்வதானால் இரண்டும் சமாந்திரமாக நடைபெற வேண்டும். இந்தியா, ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளைப்போல எங்களுடைய நாட்டுப் புடவை உற்பத்தியின் தரத்தை உயர்த்த நாங்கள் முன்வரவேண்டும். ஏனைய நாடுகளைவிட நாங்கள் பின்தங்கி நிற்பதன் காரணம்-எங்களிடம் தொழில் நுணுக்கம் (Technic) குறைவாக இருப்பது, தேர்ச்சிபெற்ற தொழில் நிபுணர்கள் இல்லாமலிருப்பதற்கு, எங்களுடைய காலநிலைக்கேற்ப தொழிற்சாலைகள் அமையாதது. உள்ளூர் உற்பத்திகளை பரீட்சிக்க விஞ்ஞான ஆராய்ச்சிச்சாலை (Reserch Laboratory) இல்லாமல் இருப்பது, தேர்ச்சிபெற்ற தொழில் நிபுணர்கள் வேலை பெற்று வெளிநாடுகளுக்குச் செல்வது போன்ற பல காரணங்களைக் கூறலாம்.

### தொழில் நுட்ப நிபுணர்கள்

வெளிநாடுகளிலிருந்து நாம் மூலப்பொருட்கள் மற்றும் புடவை உற்பத்திக்குத் தேவையான இயந்திரங்களை இறக்குமதிசெய்வது போல, அவர்களிடமிருந்து தொழில் நுட்பங்களையும் இறக்குமதி செய்யவேண்டும். தேர்ச்சி பெற்ற வெளிநாட்டுத் தொழில் நிபுணர்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இங்கு வேலைக்கு அமர்த்த வேண்டும். அல்லது நம்நாட்டிலுள்ள தொழில் நிபுணர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பி அங்கு அவர்களுடைய தொழில் நுட்பங்களை அறிந்து தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணர்களாக நம் நாட்டிற்கு திரும்பிவரவேண்டும். அவர்கள் தாங்கள் கற்ற தொழில் நுட்பங்களை இங்கு அறிமுகப்படுத்தி நம் நாட்டை முன்னேற்றவேண்டும். பின் தங்கிய நாடுகள் முன்னேற வேண்டுமென்றால் இப்படியான முறைகளைக் கையாள்வது நல்லது. இம்முறையைக் கையாளும் போது, நாமோ நமது நாடோ குறைந்துவிடப் போவதில்லை. உதாரணமாக மத்திய கிழக்கு நாடுகளை எடுத்தால் அவர்கள் பல துறைகளுக்குத் தங்களிடம் தொழில் நிபுணர்கள் இல்லாததை உணர்ந்து வெளிநாடுகளிலிருந்து தொழில் நிபுணர்களை வரவழைத்து தொழிலில்அமர்த்துகிறார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் அவர்கள் அதனையும் நிறுத்தி விடுவார்கள். ஏனெனில் அவர்கள் ஒவ்வொரு துறையிலும் தேர்ச்சிபெற்ற தொழில் நிபுணர்களைப் பெற்றுவிடுவார்கள்.

### திறமை காட்ட முடியாத நிலைமை

தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணர்களை வேலையில் அமர்த்தினால் மட்டும் போதாது அவர்கள் தொடர்ந்தும் தமது தொழில் நுணுக்கங்களைக் கையாண்டு தமது சேவைகளை நிலையாகச் செய்வதற்கு, அரசாங்கமோ கூட்டுத்தாபனங்களோ, தனியார் துறைகளோ உதவிசெய்ய முன்வரவேண்டும். எத்தனையோ தேர்ச்சி பெற்ற ஜவுளிஉற்பத்திஅனுபவமுள்ள ஜவுளி உற்பத்தி நுட்பவியலாளர்கள், வீவிங்மாஸ்டர்கள், திறமையான வர்ணம் போடுபவர்கள் வெளிநாடுகளுக்குச்சென்று அங்கு அதே துறைகளில் வேலைசெய்கிறார்கள். இவர் தங்களுடைய தொழில் நுட்பங்களை இங்கு காட்ட முடியாமல் வெளிநாடுகளுக்குச் சென்று தாங்கள் தேர்ச்சிபெற்ற துறைகளில் வேலைவாய்ப்புக் கிடைக்காமல் வெவ்வேறு துறைகளிலும் வேலைசெய்கிறார்கள், இவர்கள் இப்படியாக போக வேண்டியதற்குரிய காரணம்-அவர்களின் திருப்தியின்மையே. எத்தனை எத்தனையோ தொழில் நிபுணர்கள் (Technicians) தங்களுடைய திறமைகளை இங்கு காட்டமுடியாமல் இருக்கிறார்கள். அதோடு அவர்களுடைய திறமைக்கேற்ப சம்பளமும் கிடைப்பதுமில்லை. இதை எவ்வளவுக்குத் தடுக்க முடியுமோ அவ்வளவிற்கு நமது நாடும் தொழில் நுட்பங்களும் முன்னேறும்.

### தரம்பிரித்தல்

புடவைகளை நெசவுசெய்யும் தொழிற்சாலைகளிலும் மற்றும் சாயம் போடல், புடவை அச்சடித்தல், புடவை செப்பனிடுதல் போன்ற பகுதிகளிலிருந்து புடவை வெளியேறும் போது, அவைகள் தரம் பிரிக்கப்பட்டு, பின்னர்தான் சந்தைப்படுத்தல்வேண்டும். புடவை உற்பத்தி செய்யும் ஒவ்வொரு தொழிற்சாலையிலும் தரம் பிரிக்கும் பகுதி (Quality Control Section) அமைந்திருக்க வேண்டியது மிக அவசியம். நெசவுசெய்யப்பட்ட புடவைகளோ அல்லது சாயமிட்ட, அச்சடித்த புடவைகளோ செப்பனிடும் பகுதிக்குச்சென்று பின் பார்சல் பண்ணும் பகுதிக்கு (Packing) போகமுன் அவைகள் தரம் பிரிக்கும் பகுதிக்குச் சென்றுதான் பார்சல் பண்ணும் பகுதிக்குப்போக வேண்டும். இதன்பின்தான் சந்தைப்படுத்தப்படுதல் வேண்டும், புடவைகளின் தரத்துக்குப்பின்தான் சந்தைப்படுத்தல்வேண்டும். எங்கள் நாட்டில் புடவைகளின் உற்பத்தியைப் பொறுத்தமட்டில் ஒரு சில இடங்களில்தான் தரம் பிரிப்பது நடைமுறையிலிருக்கிறது எனச் சொல்லலாம் தரம்பிரித்து, சந்தைப்படுத்தும்போது நாங்கள் எவ்வளவு பின்னேக்கி நிற்கிறோம். அல்லது முன்நோக்கி நிற்கிறோம் என்பது விளங்கும். இப்படிப்பட்ட முறைகளைக் கையாளும் போது புடவை உற்பத்தியாளர்களுக்கிடையே போட்டி உண்டாக்கும். இப்படிப் போட்டி உண்டாகிக் கொண்டு போகும் போது நாட்டின் புடவை உற்பத்தியின் தரம் கூடிக்கொண்டு போகுமே தவிர, ஒருபொழுதும் குறையாது. ஆகவே தரம்பிரிக்கும் பகுதி ஒவ்வொரு புடவை உற்பத்திச் சாலையிலும் அமைந்திருக்க வேண்டும். இங்கு தொழில் புரிபவர்கள் தேர்ச்சி பெற்ற தொழில் நிபுணராக இருக்க வேண்டும். புடவைகளைச் சந்தைப்படுத்தமுன் அவைகளை ஒவ்வொரு கோணத்திலும் பரீட்சிக்கவேண்டும் உதாரணமாக நெசவுசெய்து சாயம் ஊட்டப்பட்ட சிந்தெட்டிக் புடவையை பரீட்சிக்கும் போது, அதன் தோற்றம் (Design) அடர்த்தி (Density) பாவனைக்காலம் (Lasting Period) முதலியவைகளையும் (colour fastness) சாயத்தின் திறமை, உரஞ்சும்போது (Rough Fastness) கழுவும் போது (Wet Fastness) வெய்யிலில் காயப்போடும் போது (Light Fastness) முதலியவைகளை மிகவும் கவனமாகப் பரீட்சித்துப்பார்த்து அதற்கு ஏற்றவாறு சந்தைப்படுத்தப்படவேண்டும்.

மேலும் நமது நாட்டில் ஒரு புடவை ஆராய்ச்சி நிலையம் (Textile Reserch Laboratory) அமைந்திருப்பது நல்லது இதேமாதிரியான சிறிய ஆய்வுகூடங்கள் ஒவ்வொரு புடவை உற்பத்தித் தொழிற்சாலைகளிலும் அமைந்திருக்கவேண்டும். இவைகள் இருப்பதால் தொழில் நுட்பவியலாளர்கள் தங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை பரீட்சிப்பதோடு சிறிய முறையில் ஆராய்ச்சிகளை (Experiments) செய்து அதைத் தங்கள் தொழிற்சாலைகளில் பெரிய முறையில் பயன்படுத்தக்கூடியதாக இருக்கிறது. புடவைத் தொழிற்சாலைகளில் இப்படியான ஆய்வுகூடங்களை அமைத்தால் அங்கு தொழில்புரியும் தொழில் வல்லுநர்கள் சிறிய, சிறிய ஆராய்ச்சிகளைச் செய்வதன் மூலம் நாளுக்கு நாள் தங்களின் தொழில் நுணுக்கங்களை அபிவிருத்தி செய்கிறார்கள். மேலும் இதை அவர்கள் தங்களின் வேலைகளில் அறிமுகப்படுத்தும் போது திருப்தியடைவதுடன் தரம் (Quality) என்பது தானாக உண்டாகுவதை உணர்கிறார்கள்.

நம் நாட்டில் உற்பத்தியாகும் புடவைவகைகளை நாம் முதலில் விரும்பி அணிய வேண்டும். ஏனெனில் எங்கள் நாட்டுப் பொருள் எங்களுக்கே பிடிக்காத போது அதை நாங்கள் எப்படி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது? ஆகவே தரமான புடவைவகைகளை உற்பத்தி செய்வதன் மூலம் நம் நாட்டு மக்களை கவர்வதோடு. வெளிநாட்டு மக்களையும் கவர முடியும். அதோடு எமது நாட்டிற்கு அந்நியச்செலாவணி கிடைக்கும். இதனால் நாடும் மக்களும் நன்மையடைவார்கள் அல்லவா?

---

நூல் ஆய்வு

## 'அஞ்சா நெஞ்சம்'

ஆசிரியர்: இ. ஞானசூரியன். வெளியீடு; உலக மறுமலர்ச்சி நிலையம், லண்டன். அச்சகம்: ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.
விலை: ரூபா 12-00

வாசகர்கள் வரவேற்கும் வகையில், லண்டன் தமிழர் மறுமலர்ச்சி நிலையம், 'லண்டன் முரசு' சிறப்பாசிரியர் திரு. இ ஞானசூரியன் அவர்களது 'அஞ்சா நெஞ்சம்' என்ற நூலை அண்மையில் வெளியிட்டுள்ளது. முற்பகுதியில் இடம் பெறும் மணிமொழிகள் பல எம்மோடு ஏதோ உரையாடுகின்றன. அப்பரின் 'நாமார்க்கும் குடியல்லோம்', காந்தியின் 'செய் அல்லது செத்துமடி', தாகூரின் 'கீதாஞ்சலி', அண்ணாவின் 'விதியல்ல உன்வேதனைக்குக் காரணம், மதியின் துணை கொண்டுநட' என்பன இவற்றுள் சில.

'தமிழ் இலக்கிய மூலம் வாழ்வில் மறுமலர்ச்சி என்ற கட்டுரைத் தொடர் தமிழ் இலக்கியத்தையும், தமிழர் வரலாற்று உண்மைகளையும் மனிதாபிமான உணர்வுடன், பரந்த உலகக் கண்ணோட்டத்துடன் நோக்குகின்றது. புறநானூறு புகட்டும் பொதுநெறிகள், நடுநிலை நெஞ்சம் தரும் நல்வழி, உலகளந்த குறள், பாரதியுகம், சிலப்பதிகாரச் சிந்தனைகள், கம்பன் கண்ட கனவு, பக்தி இலக்கிய வரிசையில் தேவார திருவாசகம், செந்தமிழ் கூறும் சமுதாயச் சீர் திருத்தம், அஞ்சா நெஞ்சம்- போன்ற பல்துறைக் கட்டுரைகளின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது. 'ஆதிசோழன்முதல் அமரர் அண்ணாதுரைவரை காலநிலைக்கு ஏற்றதும் மறுமலர்ச்சி உருவனவுமாகிய பல்வேறு பெரியார்களின் கருத்துரைகளின் தொகுப்பே கட்டுரைப் பகுதியென ஆசிரியரே குறிப்பிடுகிறார். "நெறியைப் போற்றமல் மக்கள் இன்று தலைவர்களைப் போற்றும் முறையால் வாழ்க்கையில் பூசல்கள் மலிகின்றன" என்ற குறிப்பு இடம் பெறும் கட்டுரை எம்மைச் சிந்திக்க வைக்கிறது. அறிவும் அறமும் எமது வாழ்வில் ஒன்றி அன்பாயும் அருளாயும் பொலிய வேண்டும், அன்புடைமை செறிந்த அறிவியலால் ஆகாததொன்றில்லை, நடுநிலைமை தரும் அஞ்சாமையே நாகரிகம் என்பன போன்ற மணியான கருத்துக் குவியல்கள் ஏராளமாக கட்டுரைகளில் இடம் பெறுவதால் வாசகன் வாசிப்பதுடன் சிந்திக்க தெளிவடைய ஈர்க்கப்படுகின்றான். தலைப்புக்களுக்கு பொருத்தமான தமிழ்நடை முக்கியமாக வீறுநடை நூல் முழுவதும் விரவியிருக்கிறது. சொல்லாட்சிக்கலை ஆசிரியருக்கு கைவந்த கலைபோலும்.

இரண்டாவது பாகமாக கவிதைகளும் மூன்றும் பாகமாக ஆத்மீகஅறிவுரைகளும், நான்காவது பாகமாக சைவ சமய ஒளி என்ற தலைப்பில் பல கருத்துக்களும் இடம் பெறுகின்றன. கவிதைப் பகுதி ஒரு கதம்பமாக அமைந்திருப்பது கவர்ச்சியைதராதுவிட்டாலும் கூட சில கவிதைகளில் நல்ல சமுதாய சமயக் கருத்துக்கள் பளிச்சிடுகின்றன மூன்றும் பகுதியின் இறுதியில் கீதாசாரம் பதினேழு அம்சங்களில் பிளிந்தெடுத்த சாறுபோலத் தரப்பட்டிருப்பது ஆத்ம விசாரகாரருக்கு நல்விருந்தாகலாம். ஒரு சில அம்சங்களை ஆராயும்வகையில் அழுத்தமாக எழுதப்பட்டு கோவைப் படுத்தப்பட்டிருக்குமேயானால், எம்மை ஈர்த்து நிற்கும் எழிலார்ந்த நடையுடன் இந்நூல் இன்னும் கூடிய சுவையை- சிந்தையை ஏற்படுத்தியிருக்குமெனலாம்.

ஏ. ரி. பொன்னுத்துரை.

## சர்வதேச நாணயநிதி:

# தங்கத்தின் சமபெறுமான முறை வீழ்ச்சி

(சென்றவாரத் தொடர்ச்சி)

இத்தகையபல குறைபாடுகள் நிலவிவந்த அதேவேளை 1960ஐத் தொடர்ந்து நாடுகளின் பொருளாதாரங்களில் ஏற்பட்ட மாற்றங்கள், சிந்தனைகள் என்பன சர்வதேச நாணயநிதியிலும் எதிரொலித்தது. அதாவது பிரிட்டனின் ஸ்ரேலிங் பவுணுக்கு நாணய மாற்றுச் சந்தையில் ஏற்பட்ட பலவீனநிலை, அதன் மதிப்பிறக்கம் (சென்மதி நிலுவைப் பிரச்னை தீர்க்க நாடுகளால் கையாளப்படும் இறுதி ஆயுதம்) அமெரிக்க பொருளாதாரத்தில் ஏற்பட்ட பணவீக்கத்தின் (காரணம் வர்த்தகச் சீர்குலைவு, வியட்னும் யுத்தத்தால் ஏற்பட்ட பாதுகாப்புச் செலவின் அதிகரிப்பு) மார்ச் 24ல் இருந்து கீழ்வரும் திருத்தங்கள் அமுலுக்கு வந்தன.

1. நாணயமாற்று ஒழுங்கும் நிதியின் கண்காணிப்பும்.

ஒவ்வொரு நாடும் செலாவணி ஒழுங்கை மேற்கொள்ளும் உரிமை உண்டெனினும் தமது நாணய ஒழுங்கு குறித்தும் பின்பு ஏற்படுத்தவிருக்கும் மாற்றங்கள் பற்றியும் நிதிக்கு அறிவிக்க வேண்டும். இந்நாடுகளிடம் பெறும் தகவலை அடிப்படையாகக் கொண்டு நாணய முறையின் ஒழுங்கான இயக்கத்தைக் கண்காணிப்பதுடன் தமது கடப்பாடுகளின் செயற்பாடு பற்றியும் மேற்பார்வை செய்யும்.

**ந. ஸ்கந்தராஜா**

(கொழும்பு வளாகம்)

மத்தியில் மேற்கு ஜேர்மன், ஜப்பானில் வர்த்தக மிகை ஏற்பட்டதோடு அவற்றின் நாணய பெறுமதி மாற்றமுறு திருந்தன. எனவே அமெரிக்கா 1971 ஆகஸ்ட் 15-ல் டொலரைத் தங்கமாக மாற்றுவதை நிறுத்தியதுடன் ஏனைய நாடுகளை நாணய மதிப்பிறக்கம் செய்யுமாறு கோரிக்கை விடுத்தது. இதனால் தங்க நாணய மாற்று முறை அதாவது சமபெறுமான முறை வீழ்ச்சியடைந்தது

இதன் பின்னர் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்களின் இறுதிக் கட்டமாக 1976 ஜனவரியில் ஜமேய்க்காவில் நடைபெற்ற மகாநாடு விளங்கியது. இம் மகாநாட்டில் விரிவாக்கப்பட்ட வரிச்சலுகை, எண்ணெய் சலுகை, நாடுகளால் நிதிக்குச் செலுத்தப்படும் ஒதுக்களவின் அதிகரிப்பு, நாடுகளுக்கான கடன் ஒதுக்கை அதிகரித்தல் போன்றவை பற்றி ஆராய்ந்து முடிவெடுக்கப்பட்டது. 1976

2. நிதியின் தங்க இருப்பில் ஏற்பட்ட பெயர்ச்சியுடன் சர்வதேச தங்க நாணய அமைப்பில் தங்கத்தின் பங்கு குறைவடைதலும்.

விசேட எடுப்புரிமையில் தங்கம் பெற்றிருந்த ஆதிக்கம் நீக்கப்பட்டதுடன் நாணயங்களின் சமபெறுமானங்களைக் கணிப்பிடும் பொதுக் கருவியாகவும் அது இயங்காது. தங்கத்தின் உத்தியோக பூர்வ விலை ஒழிக்கப்பட்டது. நிதியிடம் தற்போதுள்ள 5 கோடி அவுன்ஸ் நிறையான தங்கம் விற்கப்பட்டு குறித்த திட்டத்தின்கீழ் அங்கத்துவ நாடுகளுக்கு வழங்கப்படும்.

3. சர்வதேச நாணய அமைப்பின் பிரதான ஒதுக்குச் சொத்தாக விசேட எடுப்புரிமையை ஆக்குதற்கு உதவு முகமாக அதன்பயன்பாடுகளை விரிவுபடுத்துவதும் நடைமுறைமாற்றங்களை ஏற்படுத்துதலும்.

குறிப்பாக விசேட எடுப்புரிமையை வைத்திருப்போரின் வைப்புக்கள் குறித்த விதிகளை எந்நேரத்திலும் மாற்றம் அல்லது திருத்தத்திற்கு உட்படுத்த முடியும். இவ்வாறான திருத்தத்திற்கு அல்லது மாற்றத்திற்கு மூன்பு பெரும்பான்மைப்பலம் தேவையாயிருந்தது. ஆனால் தற்போது குறைந்த பெரும்பான்மை போதுமானதாகும்.

இத்தகைய மாற்றங்கள் தற்போது அங்கம் வகிக்கும் 133 நாடுகளையும் கட்டுப்படுத்துவதாக அமையும். இதன் மாற்றங்களிற்கேற்ப அங்கத்துவ நாடுகளின் சட்டங்களிலும் மாற்றம் ஏற்படுத்த வேண்டியிருந்ததால் இலங்கையிலும் கடந்த ஏப்ரல் மாதம் "பிறெட்டன்வூட்ஸ் ஒப்பந்த விசேட ஷரதது மசோதா" தேசிய அரச பேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டது. இச்சஷரத்துக்கள் தற்போதைய செலாவணி மாற்றுவிதத்தின் மிதக்கும் தன்மைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்குகின்றன.

இனி, தற்போதைய மாற்றங்களினால் குறைவிருத்தி நாடுகளுக்கு ஏற்படக் கூடிய பாதிப்புகள் பற்றி ஆராயலாம். முன்னர் போலன்றி அதிகரிக்கப்பட்ட பங்குரிமைப் பெறுமதியை உள்நாட்டு நாணயத்தில் செலுத்தக்கூடிய வசதியிருப்பதுடன் நாடுகள் தமது செலாவணி மாற்றுவீத அமைப்பை நிர்ணயிப்பதால் கூடிய நெகிழ்ச்சித் தன்மையையும் கொண்டிருக்கும். மேலும் நிதிக்கடன் அளிக்கும்போது பெருமளவிற்கு உள்ளூர் சமூக அரசியல் நிலை பற்றிக் கவனம் செலுத்துவதுடன் திடீர் இறக்குமதிக் கொடுப்பனவுகளுக்கும் நிதி அளிக்கும் விசேட எடுப்புரிமையை மேலும் பரவல அடிப்படையில் உருவாக்க சலுகை அடிப்படையிலான உதவியும் வழங்கப்படும்.

எனினும் நிதி ஸ்தாபனமானது குறைவிருத்தி நாடுகளைப் பொறுத்தவரை குறிப்பிடத்தக்க பலாபலனை ஏற்படுத்தத் தவறிவிட்டதென்றே கூறவேண்டும். இதில் உண்மையில்லாமலுமில்லை. ஏனெனில் சர்வதேச வர்த்தகத்திற்கு உதவுதல் முக்கிய குறிக்கோளாயிருந்தபோதும் நீதியான முறையில் அது நடைபெறவில்லை. குறைவிருத்தி நாடுகள் சர்வதேச வர்த்தகம் மூலம் பெற்ற நன்மையான விளைவுகள் மிகக் குறைவானதாகும். இதனாலேயே "உதவியல்ல வர்த்தகம்" அதாவது 'வர்த்தகத்துக்கு உதவுங்கள்' எனும் கோரிக்கை குறைவிருத்தி நாடுகளிலிருந்து எழக் காரணமாயது. அண்மையில் ஏற்படுத்தப்பட்ட சீர்திருத்தங்கள்கூட குறைவிருத்தி நாடுகள் மேல் ஏற்பட்ட திடீர் கரிசனையினாலன்றி அபிவிருத்தியடைந்த நாடுகளின் நாணய முறையில் ஏற்பட்ட மாற்றங்களின் விளைவேயாகும். அதாவது, குறிப்பாக, 1944 அளவில் ஏறத்தாழ முழுதங்கத்தையும் அமெரிக்கா வைத்திருந்ததால்தங்கத்தரத்தையும் பேணக்கூடியதாக இருந்தது. அத்துடன் டொலர் சர்வவல்லமை பொருந்தியதாக விளங்கியது. ஆனால் இவ்விரு நிலையும் தற்போது மாற்றத்திற்குள்ளாகவே தங்கத்தின் சமபெறுமான முறையை நீக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. மேலும் இந் நிதி ஸ்தாபனம் நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களில் அதிகளவு தலையிடுவதாகக் குற்றம் சாட்டப்படுகிறது. உதாரணமாக 1877ல் பிரிட்டனுக்குக் கடன் வழங்கியபின் சமூகத்தேவைச் செலவைக்குறைக்குமாறு கோரியதுடன் தொழிற்சாலைகளின் தேசியமய முயற்சி கைவிடப்படவேண்டும் எனவும் நிர்ப்பந்திக்கப்பட்டது. எனவே கைத்தொழில் நாடுகளுக்குமே இத்தகைய நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. இதுபோன்ற நிலைபைகள் லைபீரியா, சியராலியோனுக்கும் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். இறுதியாக சில நாடுகளுக்குப் "பொருளாதார ரீதியில் நன்மை தராது" என்று பொருளியல் நிபுணர்கள் கருதிய சந்தர்ப்பத்திலும்கூட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. குறிப்பாக தென்னாபிரிக்காவிற்கு ஏனைய ஆபிரிக்க நாடுகளை விடக் கூடிய கடன் வழங்கப்பட்டது. இஸ்ரேல் போன்றவற்றிற்கும் கூடிய முன்னுரிமை வழங்கப்படுவதில்லை அதாவது மாறிவரும் அரசாங்கங்களின் கொள்கைகளுக்கேற்ப நிதி ஸ்தாபனத்தின் செயற்பாடும் மாற்றமடைகின்றது.

## அளந்தா தந்தேன் பால் உனக்கு?

மூலம்: சிங்களம்.
தமிழாக்கம்: பிரியா. செந்தில்

பசித்த நேரம் வந்தேன் மகன் வீட்டிற்கு
அளந்து இருபடி நெல் உமல் ஈந்தான் எனக்கு
பெறவா விடவா நெஞ்சிலே சிந்தனை இருக்கு
அளந்தா மைந்தா பால் தந்தேன் நான் உனக்கு.

துன்பமணு காமல் அன்பு காட்டிய அன்னைக்கு
பிடி நெல் ஒன்று கொடுத்தே னலேன் உனக்கு
இரு நெல் அளந்து உமலுள் கொடுத்த (இ)தற்கு
என் சொன்னாய் கிழவி வெளி(யேறு) நோக்கு

தூக்கிப் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த அன்னைக்கு
மிகப் பெரிதானதா மனைவி என் மகனுக்கு
அழுது என் மனத்துக்கம் சொல்வேன் யாருக்கு
கதைத்தென் செய நான் போகிறேன் வெளிக்கு

அளந்து நெல்லு இருபடி கொடுத்த உமலுக்கு
மேலும் நாளில் அப்படிக் கொடுப்பேன் வருடத்துச்கு
எவரும் அப்படியே அவளின் தந்திரச் செயலுக்கு
நீ கோபம் தவிர் சென்றிடு வீட்டிற்கு:

தம்பியே அப்படிச் செய்யாதே எங்கள் அம்மாவுச்கு
தனங்க ளிரண்டாலும் பால் கொடுத்தாள்
எம்மிருவருக்கு
சொத்து உள்ளவை யெல்லாம் தந்தாள் நமக்கு
புத்தரை வணங்குதல் போல வணக்கம் செய்
அன்னைக்கு.

## புங்குடுதீவில் ஒரு புனித ஊர்வலம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவனும் பெரியவனுமான பெம்மான் பெருந்துறையானை விரும்பித்தேடி, கண்டு தெரிந்து, தெளிந்த பெருமை மாணிக்கவாசக சுவாமிகளுக்குண்டு. மந்திரியாய் இருந்து மகாஞானியாக மாறி மகேஸ்வரனை தரிசித்த பெருமையும் இவருக்குஉண்டு. 'குவளைக் கண்ணிக் கூறன் காண்க, அவளும் தானும் உடனே காண்க. சிவனென நானும் தேறினன் காண்க' என்றவாறு தன்னுடைய அனுபவத்தை மணிவாசகர் மனந்திறந்து கூறியுள்ளார்.

ஞான அனுபவ முதிர்ச்சியும் அனுபூதியும் மிக்க மணிவாசகரின் மகிழ்ச்சியும் ஏக்கமும் கலந்து வெளிவந்த பாடல்களேதிருவாசகப்பாடல்களாகும். இத் திருவாசகம் இதயங்களைக் கனிவித்து பழுக்கவைத்து குழைத்து உருக்கும் இயல்பினைத் தன்னகத்தே கொண்டுள்ளது. 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்' என்பது பழமொழியாகவும், பயன்மொழியாகவும் விளங்கி வருகிறது. நெஞ்சக்கற்களை பிசைந்து கடவுளின் கருணை வெள்ளத்தில் மூழ்கவைக்கும்

**நாக. சாந்தலிங்கம்**

திறனுடைய திருவாசகத்தை தில்லைநடராஜப்பெருமான் மணிவாசகர் சொல்லச் சொல்ல ஏட்டில் எழுதிவைத்துள்ளான்.

ஊழிக்காலத்தில் தனது தனிமையைப் போக்கிக் கொள்ளவே சிவபெருமான் திருவாசகத்தை பிரதிபண்ணிக் கொண்டார் என்று மனோன்மணிய ஆசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் கூறியுள்ளார்கள். இறைவனே எழுதி கையொப்பமிட்டு வைத்த திருவாசகத்தை சைவ உலகம் மட்டுமலலாது எல்லா உலகத்தினரும் விரும்பிப் படித்தார்கள்-படிக்கிறார்கள். மேல் நாட்டு அறிஞரான ஜி. யு. போப் என்னும் பாதிரியார் திருவாசகத்தை விரும்பிப் படித்ததோடு ஆங்கிலத்திலும் மொழிபெயர்த்துள்ளார். அவர் தன்னுடைய சகபாடிகளுக்குக் கடிதம் எழுதும்போதெல்லாம் ஒரு திருவாசகத்தையும் சேர்த்து எழுதுவாராம்.

இத்தகைய மேன்மைகளும், பெருமைகளும் மிகுந்த திருவாசகத்திற்கு புங்குடுதீவில் திருவாசகச் சிந்தனை வட்டத்தினர் ஒரு விழா எடுத்துச் சிறப்பித்துள்ளனர். சிலப்பதிகாரத்திற்கு விழா எடுத்து பெருமை பெற்ற புங்குடுதீவு திருக்குறளுக்கு விழாக்கண்டு மகிழ்ந்த புங்குடுதீவு இப்பொழுது திருவாசகத்திற்கு விழாக்கண்டு களிப்புற்றது. சிலப்பதிகார விழாவிற்கும், திருக்குறள் விழாவிற்கும் இந்திய அறிஞர்கள் வந்து சிறப்பித்ததுபோல திருவாசகத்திற்கும் இந்திய அறிஞர் தருமையாதீனப்புலவர் வித்துவான் வி. சா. குருசாமிதேசிகர் அவர்கள் வந்து சிறப்புரையாற்றினர்.

புங்குடுதீவு பெருங்காடு சிவன்கோவில் சிவப்பணிக்கும் செந்தமிழ்ப் பணிக்கும் இடம் கொடுக்கும் பூலோக கைலாசமாகும். பல ஆண்டுகளுக்கு முன்னால் தவத்திரு குன்றக்குடி அடிகளார் வருகை தந்து தமிழ் அருச்சனையை இந்தக் கோயிலிலேயே முதன் முதலாகத் தொடக்கிவைத்தார் தமிழ் அருச்சனை நடந்த நாளே இறைவன் கருணையால் வான்முகில் மகிழ்ந்து பெய்து சைவப் பெருமக்களை சந்தோசிக்க வைத்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு முப்பத்துமூன்று குண்டங்களோடு கூடிய நாறு ஸ்தம்ப உத்தமோத்தம மகா கும்பாபிஷேகம் நடந்த இக் கோவிலிலேயே திருவாசக விழாவும் நடைபெற்றது. விழாவன்று மாலை வீரா மலை நாகேஸ்வரன் கோவிலருந்து திருவாசக ஏட்டுச்சுவடியை அடியார்கள் புடைசூழ பிரதான வீதி வழியாக சிவன் கோவில் விழா மண்டபத்திற்கு எடுத்துவந்தார்கள். சகடைவண்டியில் இடப வாகனத்தை ஏற்றி ஏட்டுச் சுவடியை அதன்மேல் வைத்து மாணவ மாணவிகள் திருவாசகப் பாடல்களைப் பாடிக் கொண்டுமுன்னேசெல்ல அவர்களுக்குப் பின்னால் சுவடி ஊர்வலம் தொடர்ந்துசென்றது. சுமார் ஆறு மைல்களுக்கு இந்த ஊர்வலம் நீண்டது.

இந்த ஊர்வலத்தின்போது திருவாசக வட்டத்தினர் உண்டியல் குலுக்கிப் பணம் சேர்த்தனர் இந்தப்பணம் கிழக்கிலங்கை சூறவளி நிதிக்கு அனுப்புவதாக விழாக்குழுவினர் தீர்மானித்துள்ளனர். வைகைக்கரை உடைப்பெடுத்து வெள்ளம் பெருகிய போது எப்பெருமான் பிட்டுக்கு மண்சுமந்த சமூக உணர்வினை இந்த ஊர்வலம் மக்களுக்கு நினைவூட்டியது பேராசிரியர் சி. இ. சதாசிவம் பிள்ளை திருவாசக விழாவிற்குத் தலைமைதாங்கினர்.

இந்த விழாவினையும் ஊர்வலத்தையும் சிறப்பாக நடாத்த முயற்சி எடுத்த திருவாசக சிந்தனைவட்டச் செயலாளர் புலவர் ஈழத்துச் சிவானந்தனை இங்கு குறிப்பிட்டுப் பாராட்ட வேண்டும். சைவத்தமிழ் அறிஞர்களான வித்துவான் பொன் அ. கனகசபை, ஆசிரியர் க. நல்லதம்பி, சுவாமி க. நாகலிங்கம்பிள்ளை ஆகியோரும் புங்குடுதீவு இந்து வாலிபர் சங்கஇளைஞர்களும் ஏனைய சைவப் பெருமக்களும், இந்தப் புனித ஊர்வலத்தையும் விழாவையும் நடாத்த பேருதவி புரிந்தனர்.

# கலைமஞ்சரி

சந்திப்பு : 3

# எம். ஜி. ஆர். எனும் மூன்றெழுத்து

ஆங்கில எழுத்துக்களில் எந்த எழுத்துக்கு அதிக 'மவுசு' இருக்கிறது என்பது எனக்குத் தெரியாது இலக்கங்களிலும் எந்த இலக்கத்துக்கு அதிக சக்தி இருக்கிறது என்பது பற்றி எனக்கு அதிகம் தெரியாது. அந்த அளவுக்கு நான் ஒரு 'நியூமரோலோஜிஸ்ட்' அல்ல! ஆனாலும், மூன்று எழுத்துக்களுக்கு ஒரு செல்வாக்கு இருக்கிறது என்பது எனது அபிப்பிராயம் இதனை சற்று விரிவாகக் கூறுவதென்றால், மூன்று 'இனிஷல்' களுக்கு மக்கள் மதிப்பு சற்று அதிகம்தான்! பெயர்களைச் சுருக்கி, அதனை எழுத்துக்களில் அடக்கிவிடும் முறை இப்பொழுதான் பிரபல்யமாகி விட்டதே!

தமிழக அரசியலையும், அரசியலில் ஓரளவு மக்கள் செல்வாக்குப் பெற்ற அரசியல் தலைவர்களையும் எடுத்துப் பார்ப்போம்.

ஈ. வெ. ரா, அண்ணா, கலைஞர், எம் ஜி. ஆர், காமராஜர், கல்யாணசுந்தரம், ம. பொ. சி, இந்திரா... இப்படியாக அரசியல் தலைவர்களின் பெயர்களும், தி க- தி. மு. க- அ. அ. தி. மு. க, காங்கிரஸ்- இந்திரா காங்கிரஸ், தமிழரசுக்கழகம், சி பி, பார்வேட் புளக்... இப்படியாகக்கட்சிகளும் தமிழ்நாட்டில் காணப்படுகின்றன. இவற்றில் இன்று தி க வுக்கு மவுசு இல்லை. ஆனால் இதனை ஆரம்பித்த ஈ. வெ. ரா.வுக்கு மக்கள் மத்தியில் நிலையான செல்வாக்கு உண்டு. தி. மு. க.வுக்கு நிலையான செல்வாக்கு இருக்கும் அதேநேரத்தில் இதன் தலைவர் அண்ணாவையும் மக்கள் இன்றும் இதயத்தில் வைத்துப் பூஜிக்கின்றனர். கலைஞர் சிறப்பாகத் திகழ்கின்றார். அ. அ. தி. மு. க.வை விட எம். ஜி ஆர்; பெயரில் ஜொலித்துக்கொண்டிருக்கின்றார். காங்கிரஸுக்குச் செல்வாக்குக் குறைவாகக் காணப்பட்டாலும் காமராஜரை தமிழக மக்கள் பலர் தெய்வமாக மதிக்கின்றார்கள். கல்யாணசுந்தரத்திலும் பார்க்க பெயரில் சி. பி. பெயர் சிறப்பாக அடிபடுகிறது. இந்திரா—இந்திரா காங்கிரஸுக்கு ஓரளவு செல்வாக்குண்டு. தமிழரசுக்கழகத்தைவிட ம. பொ. சி, ஏதோ ஒருவகையில் மக்கள் மத்தியில் செல்வாக்குடன் திகழ்கின்றார். இப்படியாகப் பலருண்டு—பலவகை உண்டு. ஆனாலும் மூன்று எழுத்துக்கும் மக்களுக்கும் என்ன மாதிரியான தொடர்போ தெரியவில்லை. ...எழுத்தோ, 'இனிஷ'லோ மூன்றுக்கு ஒரு சக்தி உண்டு தான்! தி. மு க. என்றால் கலைஞர் கண்முன் நிற்கிறார். அதே நேரத்தில் ஈ. வெ. ரா, அண்ணா மக்களின் பிரிக்கமுடியாத ஒரு சக்தியாகத் திகழ்கின்றார்கள்.

அ அ தி மு க— ஒரு நீண்ட பெயர்! ஆனால் எம் ஜி ஆர் ஒளி நன்றாகப்பளிச்சிடுகிறது ம பொ சி,யும் ஒரு கட்சியின்—தமிழரசுக் கழகத்தின்—தலைவர் தான். ஆனால் கட்சி இயங்குகிறதா என்பது பற்றித் தெரியவில்லை ம. பொ. சி. பெயர் தமிழகத்தில் நன்கு தெரியும்! இப்படிப்பல!

இக்கட்டுரைத் |தொடர் எம் ஜி ஆரைப் பற்றியது. ஆகையினால் எம் ஜி ஆர் என்னும் மூன்றெழுத்தை மட்டும் இங்கு பார்ப்போம்.

ஒருவர் கட்சியினால் வளர்வதும் உண்டு; ஒருவரினால் கட்சி வளர்வதும் உண்டு. இதில் அ அ தி மு கழகத்தில், எம் ஜி ஆர் எனும் தனிமனித சக்திக்குத்தான் இடமுண்டு. எம் ஜி ஆர் கட்சி என்றுதான் தமிழ்நாட்டில் கூறப்படுகிறதேதவிர, அ அ தி மு க பெயர் அல்ல! இந்த அளவுக்கு தமிழ்நாட்டில் எம் ஜி ஆர் உயர்ந்து நிற்கிறார். சென்னை வாசிகள் படித்தவர்கள்—பல ரகத்தினர். ஆனால் மற்றைய மாவட்டங்களில்—

## மகான்

கிராமப்புறங்களில், எம் ஜி ஆர் என்றால் அது ஒரு மயக்கம்தான்! இதனை முன்னைய கட்டுரைகளில் நான் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கின்றேன். பல மாவட்டங்களில் எம் ஜி ஆர் ஒரு தலைவராக மட்டுமல்ல, தெய்வமாகப் பூஜிக்கப்படுகின்றார். பெண்களின் பக்தி சொல்லுந்தரமன்று. எம். ஜி. ஆர். மீதான இளைஞர்கள்போக்கு தீவிரமானது! ஆனாலும் எம். ஜி. ஆர். தெரிந்தோ தெரியாமலோ சில தவறுகள்செய்வது தவிர்க்கப்படவேண்டும்!

முதலமைச்சராகவர முன்னர் எம். ஜி. ஆர். இருந்தநிலை வேறு; முதலமைச்சரானபின்னர் அவர் இருக்கும் நிலை வேறு. திரையில்மட்டும் முன்னர் பார்த்து மகிழ்ந்தவர்கள் இப்பொழுது நேரில் காண விரும்புகிறார்கள். முன்னர் ரசிகர் தலைவராக இருந்தவர் இப்பொழுது மக்கள் தலைவராக இருக்கின்றார் எம். ஜி. ஆர். ஒரு நடிகர் என்று கூறியவர்கள், இன்று முதலமைச்சர் என்று கூறிக்கொள்கின்றனர். ஆகையினால், நிலைமைகள் மாறும்போது தன்னையும் அவர் மாற்றிக்கொள்ளவேண்டும்.

ஒரு கலைஞனுக்கு மக்கள் தொடர்பு முக்கியமானது. தேடிவருவோரை தடைவின்றிப் பார்க்கவேண்டும். காலம், நேரம், தகுதி இதற்கு முன் நிபந்தனையாக இருக்கக் கூடாது!

ஈ. வெ. ரா. எப்படி மக்களைச் சந்தித்தார்? மக்கள் எப்படி அவரை நாடினார்கள்? அண்ணா எப்படி மக்களைக் கண்டார்? எப்படி மக்கள் அவரைத் தேடிச்சென்றார்கள்? காமராஜர் எப்படி மக்களுடன் உறவாடினார்? கலைஞர் எவ்விதம் மக்களுடன் நெருக்கமாகப் பழகுகிறார்? எவ்விதமாக மக்கள் ஈயாக மொய்க்கிறார்கள்?— இவற்றையெல்லாம் எண்ணிப் பார்க்கவேண்டாமா?

எம். ஜி. ஆர். ஒரு நடிகர். நடிகர் நாட்டை ஆளலாமா என்று கேட்கத்தேவையில்லை.

ஜனநாயக ரீதியில் மக்களால் தெரிவுசெய்யப்பட்டவர் அவர். இதனை ஏற்றே ஆகவேண்டும். இதற்கேற்ற வகையில் எம், ஜி. ஆரும் தம்மை மாற்றிக்கொள்ள வேண்டும்.

தமிழக அரசுக் கவிஞர் கண்ணதாசனை நான் சந்தித்தபோது; ஒரு கட்டத்தில் "தமிழக முதலமைச்சர் நிர்வாகத்துக்குப் புதியவர். அனுபவம் பெறவேண்டும்" என்றார். நிர்வாகத்துக்கு எம் ஜி ஆர். புதியவர்தான் ஆனால மக்களுக்கு அவர் முதலமைச்சர். அடுத்ததுதான் நடிகர். நடிகனை விரும்பாதவர்களும் எம். ஜி. ஆரை முதலமைச்சராக ஏற்றுள்ளனர். ஆகையினால் மக்களிடம் அவர் நெருக்கமாக வேண்டும்.

எம் ஜி ஆர் எனும் மூன்றெழுத்து இன்றுமிகவும் சக்தி வாய்ந்தது. இம்மூன்றெழுத்து திரை உலகிலிருந்து நிஜ வாழ்க்கைக்கு இப்பொழுது திரும்பியிருக்கிறது, இத்திருப்பம் கடந்த சட்டசபைத்தேர்தலில் ஏற்பட்டது. இத்திருப்பம் எதிர்பார்த்ததோ, எதிர்பாராததோ எதுவாகவிருந்தாலும் அரசியலில் அற்புதங்கள் நடப்பது அதிசயமல்ல! கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திபலப்படுத்துவதில் தான் 'முத்திரை' டளிச்சிடும். சந்திரமண்டலத்தில் (முதன் முதலான மனிதன்) ஆம்ஸ்ட்ரோங் காலடிவைத்தபோது சொன்னார்— "நான் இப்பொழுது வைப்பது ஒரு அடிதான்- ஆனால் இந்த முதல் அடி, மனிதகுல வரலாற்றில் ஒரு மாபெரும் அடி" என்றார். இதுபோல கடந்த தேர்தலில் எம் ஜி ஆருக்கு கிடைத்தது ஒரு பெரிய சந்தர்ப்பம்தான். இதனைக் கட்டிக்காத்து நிலைபெறச்செய்வதில்தான் அவர் திறமை, எதிர்காலம் தங்கியிருக்கிறது

உண்மைகள் சிலவேளை கசக்கும் என்று நான் ஆரம்பத்திலேயே கூறினேன். திரைவானில் ஜொலிக்கும் எம் ஜி ஆர் திரையுலகில் இருக்கும் வரைதான் பளிச்சிடமுடியும் என்ற நிலையை அவர் நிச்சயமாக மாற்றியமைக்கவேண்டும். திரையை விட்டாலும் அவர் மக்கள் மத்தியில் நிலைப்பார் என்ற உண்மையை இந்த மூன்றெழுத்து நிரூபிக்கவேண்டும் ஏனென்றால் எம். ஜி. ஆர். திரையை விட்டால் மக்கள் தொடர்பு அவருக்கு இருக்காது என்று சவால் விடுகிறார்கள்! இவர்களுக்கு எம் ஜி ஆர் ஆச்சரியக் குறியாக நிற்கவேண்டும்! எம் ஜி ஆர் எனும் மூன்றெழுத்து திரையை விட்டாலும் ஜொலிக்குமா? இதனை அவர்தான் நிரூபிக்க வேண்டும்! இதில்தான் இந்த மூன்றெழுத்தின் நிலையான காலமும் தங்கியிருக்கிறது!

எம் ஜி ஆர் நடிக்கவேண்டும்; அல்லது நாடாளவேண்டும்! நடித்துக்கொண்டே அவர் நாடாள்வது பலமான எதிர்காலத்தை உருவாக்குமா என்பதை அவர்தான் முடிவுசெய்ய வேண்டும். காரணம், தமிழகத்தில் இன்றுநடக்கும் ஆட்சி ஒரு தனி மனித செல்வாக்கின் பிரதி பலிப்பு! தனிமனித இயக்கங்கள் நீண்டகாலம் ஆட்சியில் இருந்ததாக சரித்திரங்கள் இருந்ததா? மூன்றெழுத்து எனும் எம் ஜி ஆருக்கும் இது புரியாததுமல்ல; புதிதுமல்ல! (முற்றும்)

# ஈழத்துச் சினிமா கண்டதும் கேட்டதும்...

நடிகர் எம். ஜி. டீன் குமார் தன்னைப்பெற்ற தாயிடமும், தனது அரசியல் வழிகாட்டியான இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம் எஸ். செல்லச்சாமியிடமும் ஆசிபெற்று 'நான் உங்களில் ஒருவன்' திரைப்படத்தில் கதாநாயகனை நடித்தார். வத்தளை விஜயா ஸ்டுடியோவில் லிபர்ட்டி பிலிம்ஸாரின் இரண்டாவது தயாரிப்பாள 'நான் உங்களில் ஒருவன்' திரைப்பட ஆரம்ப விழாவில் மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

'நான் உங்களில் ஒருவன்' திரைப்பட ஆரம்பவிழா காட்சிகள் அனைத்தையும் கமிரா நிபுணர் சபூர் படமாக்கினார்.

உழைக்கும் தொழிலாளர்களின் பிரச்னைகளைக்கொண்ட வெற்றி நாடகமான அந்தனி ஜீவாவின் 'அக்கினிப் பூக்கள்' நாடகமே கலைச்செல்வனின் திரைக்கதை வசனத்தில் 'நான் உங்களில் ஒருவன்' ஆக உருவாகியுள்ளது

இந்தத் திரைப்படத்தின் ஆரம்பவிழாவை ஒரு தொழிலாளியே குத்துவிளக்கேற்றி ஆரம்பித்துவைத்ததுபெருமையாக இருந்தது. மற்றும் திரு எம். எஸ். செல்லச்சாமி சிங்களத் திரைப்பட நடிகர் பெட்டிஸ் பெரேண்டோ, டைரக்டர் இராசரத்தினம், 'நெஞ்சுக்கு நீதி' தயாரிப்பாளர் திரு. மாலினிதேவி ஆகியோர் குத்துவிளக்கேற்றினார்கள். 'தெய்வம் தந்தவீடு' தயாரிப்பாளரும், லிபர்ட்டி பிலிம்ஸ் அதிபருமானதிரு வி. கே டி பொன்னுசாமி 'கிளப்' அடித்து படத்தை துவக்கி வைத்தார் பிரபல சிங்களத் திரைப்பட நடிகை சாந்தி லேகாவின் இல்லத்தில் நகைச்சுவை நடிகர் டொன் பொஸ்கோ, கமலி, பேர்ள் வாசுதேவ சம்பந்தப்பட்ட நகைச்சுவைக் காட்சிகள் இரண்டு நாட்களாகப் படமாக்கப்பட்டன.

தமிழக நட்சத்திரம் 'வெண்ணிற ஆடை' நிர்மலாவுடன் டீன்குமார் நடிக்கும் இத் திரைப்படத்தில் எம். எம் ஏ. லத்தீப், ஏகாம்பரம், சிதம்பரம், யாழூர் விஜேயேந்திரன், வி கே டி பாலன், பரீனலை, ஜெயதேவி, மோகன் குமார். கண்டி ரமாய் டீன், ரவி, மகேந்திரன் ஆகியோர் முக்கிய பாத்திரத்தில நடிக்கின்றனர். 'நான் உங்களில் ஒருவன்' கமராவை சபூர் கையாள, சுண்டிக்குழி சோமசேகரன் டைரக்ட் செய்கின்றார்.

பணத்துக்கும், அறிவுக்கும் நடைபெறும் போட்டியில் தன் இசைத்திறமையை மட்டுமே பயன்படுத்திய அறிவுதான் செல்வத்தைவிட உயர்ந்தது என சாதிக்கும் ஒரு இலட்சிய இளைஞனின் காவியம்தான் திரு ஏ கணேசானந்தன் தயாரித்தளிக்கும் ஸ்ரீதேவன் பிலிம்ஸாரின் 'எனக்கென்று ஒரு உலகம்.''

இப்படம் இம்மாதம் (பெப்ரவரி) திரையிடப்படும் என்றும் தமிழகம் சென்றுள்ள நடிகை ஹெலன்குமாரி நாடு திரும்பியதும் அவர் சம்பந்தப்பட்ட மீதிக்காட்சிகள் படமாக்கப்படவுள்ளன என்றும் தயாரிப்பாளர் என்னிடம் தெரிவித்தார்.

இப்படத்தை திரு. எஸ். இராமநாதன் இயக்குகிறார். டீன்குமார், அலெக்ஸாண்டர், தேவகணேஷ், கலைச்செல்வன், எம். எம். ஏ. லத்தீப், டரினலை உட்பட பலர் இப்படத்தில் நடிக்கின்றனர். விஜேவர்த்தனா ஒப்பனையைக் கவனிக்க, ஜோ. ஜி ஜெயசீலன் திரைக்கதை வசனம் எழுதியிருக்கிறார்.

-அவதானி

# நடிப்புக் கலை

## கற்பனையில்லாமல் கலையநுபவம் பூர்த்தியாகாது

ஈ. ஆர். திருச்செல்வம்

நடிப்பு என்பது, ஒரு பொருளின் அல்லது காட்சியின் நகல் பதிப்பு அல்ல; குறிப்பிட்ட பொருள் அல்லது காட்சி நடிகனின் அகப்புலனைப் பாதித்து மனதிலே பதிகிற சுவடுகளை ஓர் உந்துதலோடு புறம்தள்ள விழைவது தான் நடிப்பு. ஆனால், ஒரு நடிகன் தான் காணும் காட்சிகளின் உள்-வெளிச்சார்புகளை உணர்வதற்கு கண்களோடு கற்பனா 'சக்தியும் அவசியம். இந்தக் கற்பனா சக்தியைப் பயன்படுத்தும் பயிற்சி பெரும்பாலாருக்கு இருப்பதில்லை.

இருந்தும் பழக்க தோஷம் நம் பிரக்ஞையை மறைப்பதால் அன்றாடம் நாம் காணும் காட்சிகளை ரசனையோடு நாம் பார்வையிடுவதில்லை, அதனால் கலையனுபவம் பூர்த்தியாவதில்லை.

கற்பனா சக்தி வளர்ந்து பரிணமித்து முன்னேற பின் வரும் அப்பியாசங்கள் நடிப்புக்கல்லூரிகளில் பயன்படுத்தப்படுகின்றன. இப்படிச்செய்வானேன்? கற்பனா சக்தியின் வளர்ச்சி, முன்னேற்றம் ஆகியன பயிற்சியில் தங்கியுள்ளது என்பது உளவியலாளர் கருத்தாகும். அப்பியாசங்களை பயிற்சி வகுப்புகளில் நீண்டகாலம் பயன்படுத்தா விட்டால் உதவுபடி ஆகாது. அப்பியாசங்கள் தேவையையொட்டி வழங்கப்படுவதால், அவற்றை அப்படியே நகம் செய்யாமல் சந்தர்ப்ப சூழ் நிலைக்கேற்ப அவற்றின் அமைப்பை ஆசிரியர் மாற்றி அமைக்கலாம், ஆனால் களப் பயிற்சியின் பொது கற்பனா சக்தி ஜீவகளையோடு செயற்படுகின்றதா என்பதை ஆசிரியர் கவனிக்கவேண்டும்

அப்பியாசங்கள் முழு ஊமத்திப் (Pantomime) அமைவதோடு பயிலுனர் குழு முழுவதும் பயிற்சியின்போது செயற்படுவது பெரிதும் விரும்பத்தக்கது. பயிற்சிக்கென ஒதுக்கப்பட்டிருக்கும் நேர காலத்தை ஆசிரியர் இரண்டு கூறுக்கி அப்பியாசங்களை அறிமுகப்படுத்தலாம். எடுத்துக் காட்டாக இப்படிச் செய்யலாம்.

### 1-ம் பாட நேரம்

1/2 மணித்தியாலம். அலகு I

பயிற்சியின் போது தனியாள் உணர்வுகளையும், அனு

(9-ம் பக்கம் பார்க்க)

## மாணவ மணிகளுக்கு!

அநேக மாணவர்கள் மிக ஆவலுடன் ஆசிரியர்களைப் பேட்டி கண்டு எமக்கு அனுப்பிவருகின்றனர். உங்களது ஆவல் என்னைத் திணறவைத்துவிட்டது.

பேட்டிகாணும் மாணவர்களுக்கு ஒரு வேண்டுகோள்—

உங்கள் பேட்டிகளுடன் பேட்டிகண்ட ஆசிரியரது அனுமதிக் கடிதத்தை இணைத்து அனுப்புங்கள்.

அடுத்த வாரம் முதல் பேட்டிகள் தொடர்ந்து வெளிவரும்.

# அன்புத் தோழன்

- சி. வி. குணசேகரம் -

[19]

கையில் திவட்டியை ஏந்தியவாறு குதிரையில் விரைந்து வந்த வீரனை சேதுபதி அடையாளம் கண்டுகொண்டது. உடனே விக்கிரமனைத் தட்டி அவனைக் காட்டிவிட்டு தன் இடையில் சொருகியிருந்த கத்தியை உருவிக்கொண்டு ஆத்திரத்துடன் பாயத்தயாரானது.

சேதுபதி பாயத் தயாரானதை விக்கிரமன் கண்டுவிட்டான் உடனே அவன் அதன் கழுத்தில் எட்டிப்பிடித்தான். குதிரையில் வந்த வீரன் அவர்களைக் கடந்து அப்பால் சென்றுன்.

சேதுபதிக்கு அவனைக் கொல்லாமல் விட்டது ஆத்திரமாக இருந்தது.

சேதுபதி அவனைக் கொன்றுல் நாம் மணிக்கொடி இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாது. அவனை உயிருடன் சிறைப்பிடிக்கவேண்டும்.' நீ போய் எமது பையிலுள்ள நீளமான கயிற்றை எடுத்து வா' என்றுன் விக்கிரமன்

சேதுபதி மின்னல் வேகத்தில் தாவிச்சென்று, அவர்கள் தங்கியிருந்த மரத்தின் அடியில் இருந்த பையில் கயிற்றை எடுத்துக்கொண்டு விரைந்து வந்தது.

விக்கிரமன் கயிற்றில் தடம் போட்டுவிட்டு 'பிரபு எதிரி அகப்பட்டான், எதிரி அகப்பட்டான்...' என்று பலமாகக் கத்திஞன்.

குதிரையில் சென்ற வீரன் அச்சத்தம் கேட்டுத் திரும்பி வேகமாக அவர்கள் இருந்த மரத்தை நோக்கி வந்தான்

சேதுபதி தடம் இருந்த கயிற்றின் நுனியைப்பிடித்துக் கொண்டு தாவி அவன் மீது அமர்ந்து அவனுக்குத் தடம்போட்டது

விக்கிரமன் கயிற்றை இழுத்தான், சென்ற வீரன் பொத்தென்று நிலத்தில விழுந்தான்.

விக்கிரமன் மரத்திலிருந்து இறங்கி அவ்வீரனுக்கு அருகே சென்றுன். விக்கிரமனைக் கண்டதும் அவ்வீரனின் முகம் கலவரமடைந்தது. விக்கிரமன் அவ்வீரனை மரத்தோடு சேர்த்துக்கட்டிஞன். அவ்வீரன் தனது வீரரை அழைக்கப் பலமாகக் கத்திஞன். உடனே சேதுபதி இலைகளைப் பிடுங்கி அவனது வாய்க்குள் திணித்தது.

'நீ மரியாதையாக மணிக்கொடி இருக்குமிடத்தைக் கூறு இல்லாவிட்டால்...' விக்கிரமன் பல்லை நெருமிஞன். சேதுபதி அவன் வாயுள் இருந்த இலைகளை எடுத்தது.

''என் உயிர் போனாலும் மணிக்கொடி இருக்குமிடத்தைக் கூறமாட்டேன்'' என்றுன் அவ்வீரன்.

''அப்படியா...? உன்னை கூற வைக்கும் வழி எனக்குத் தெரியும்... சேதுபதி உனது வேலையாட்டைக்காட்டு'' என்றுன் விக்கிரமன்.

சேதுபதி தனது கூரிய நகங்களால் அவ்வீரனது முகத்தை பிறாண்டியது. அவ்வீரன் வேதனையைத் தாங்கமுடியாது பலமாக அலறிஞன். விக்கிரமன் அவனது வாய்க்குள் சருகுகளைத் திணித்தான். சேதுபதி அவனதுஉடலையும் பிறாண்டியது. அவ்வீரனது கன்னத் தசைகள் கிழிந்து தொங்கின. இரத்தம் கொப்பளித்தது

அவ்வீரனல் சத்தமெழுப்ப முடியவில்லை. அதிக இரத்தம் வெளியேறியதால் மயக்கமடைந்தான்.

பொழுது புலர்ந்தும் அவ்வீரனது மயக்கம் தீரவில்லை. விக்கிரமன் சேதுபதியை அவ்வீரனுக்கு காவலாக இருக்கச் செய்துவிட்டு தண்ணீர் தேடப் புறப்பட்டான்.

சேதுபதி மரக் கொப்பொன்றில் அமர்ந்திருந்தது. அப்போது ஒரு வீரன் குதிரையில் வேகமாக வந்தான்.

[அடுத்த எண்ணத்தில்]

# மாணவர் எண்ணம்

'கண்டோஸ்'

## உங்களுக்குத் தெரியுமா?

### நட்சத்திரங்கள் எத்தனை கோடி?

இரவில் வானத்தில்தெரியும் தாரகைகள் எத்தனை? அவை எண்ணற்றவை. பெரியனவும், கிட்டவுள்ளனவும் தான் எமது கண்ணுக்குப் புலனுகின்றன. ஒரு தொலைநோக்கிக் கருவி மூலம் பார்த்தால் மேலும் பல நட்சத்திரங்களைக் காணலாம்.

நட்சத்திரங்களை ஒவ்வொன்ருக எண்ணிக் கணக்கெடுக்க யாராலும் முடியாது. ஆனல் ஆகாயத்தைப் படமெடுக்க தொலைநோக்கியோடு இணைக்கப்பட்ட 'கமரா'க்கள் உண்டு. இவற்றின் உதவியால் வானவியலாளர் நட்சத்திரங்களைக் கணக்கிடுகிறுர்கள். பூமியையும், சூரியனையும் சேர்ந்த வானவழியில் சுமார் 100,000 கோடி தாரகைகள் உள்ளன வென்று இன்று கணக்கிட்டுள்ளனர். இவற்றைவிடப் பிற கோள்களைச்சேர்ந்த வானவழிகளிலும் நட்சத்திரங்களுண்டு. பெரிய தொலைநோக்கிக் கருவிகளும் தாரகைகளை கணக்கிடும் பொறிகளும் அளித்துள்ள கணக்கின்படி எல்லாமாக 1000 கோடி நட்சத்திரக் கூட்டங்கள் உள்ளன என்று தெரிகிறது. சூரியனைச் சேர்ந்த கூட்டத்தில் 100 000 கோடி நட்சத்திரங்கள் உண்டென்றுல், 1000 வெவ்வேறு கூட்டங்களிலும் எத்தனை கோடானுகோடி நட்சத்திரங்களோ?

### வெட்ட வெட்டத் தழைக்கும் வால்

சில பல்லிகள் எதிரியிடமிருந்து சாதுரியமாக தப்பித்துக்கொள்ளும். ஒரு பல்லியின் வாலைப்பிடித்தால் அதன் வால் மாத்திரம் எம் கையில் இருக்கும் வாலைமுறித்துக்கொண்டு ஓடிவிடும் பல்லிக்கு சிறிது நேரத்தில் புதியவால்வளர்ந்து விடும். உடலில் புதியஉறுப்பை வளர்த்துக்கொள்ளும் பிராணி பல்லி மாத்திரமல்ல, நட்சத்திரமீன். இதனை இரண்டு, மூன்று துண்டுகளாகவெட்டிப் போட்டாலும் ஒவ்வொன்றும் ஒவ்வொரு மீனுக உருவெடுத்து விடும். இதைவிட அதிசயமான புழு ஒன்றுண்டு. இப்புழு தன் உணவைத்தேடி ஒரே பாதையில் செல்லும். இதனை இரண்டாக வெட்டிவிட்டால் இரண்டுபுழுக்கள் தோன்றும். இரண்டுமே பழையபாதையில் உணவு தேடிப்போகும்.

### எப்படித் தெரியும்?

கோழி, புரு மற்றும் பறவைகள் இருள் கண்டதும் படுத்துக்கொள்ளப்போவது ஏன்? இருளிலே எவையும் அவைகளால் செய்யமுடியாது காரணம் அவைகளுக்கு மாலையில் கண்கள் தெரியாது. ஒரு கோழியின் கண் பகல்வேளைக் கண். ஒரு ஆந்தைக்குள்ளதைப் போல ஒரு பூனைக்குள்ளதைப்போல விசேட கண் உறுப்புக்கள் ஒரு கோழிக் குஞ்சுக்கு இல்லை.

### மீன் நீந்தும் வேகம்

மிக விரைவாக நீந்தும் மீன் பாரக்குடா. ஒரு 4 அடி நீளமான பாரக் 27 மைல்களை ஓடுமாம். ஒரு 9 அங்குல நெத்தலி மீன் மணிக்கு 6 மைல்களை நீந்துமாம்!

### உயரமான மனிதர்கள்

மிக உயரமான மனிதர்கள் ஆபிரிக்காவில் இருக்கிறுர்கள அங்கே வாட்டுசி என்ற இனத்தவர் பெரும்பாலும் 7 அடி உயரமானவர்கள். பெண்களும் இவர்கள்போன்று இருப்பார்கள்.

தொகுத்தவர்:

எஸ். பி. கே. வேலழகன்
(மட்டுவில் மகாவித்தியாலயம்)

### மாணவச் சிரிப்பு

பொதுஅறிவுப் போட்டியிற் கலந்துகொண்ட ராமு எல்லாக் கேள்விகளும் மிகவும் கஷ்டமாக இருந்ததாகத் தனது வகுப்பாசிரியரிடம் புகார் செய்தான். கேள்விகளை வாங்கிப்படித்த ஆசிரியருக்கு தலை சுற்றியது. அவரது தலைச் சுற்றலுக்கு காரணம் அதிலிருந்த கேள்விகளே. இதோ கேள்விகள்:

1. கம்பராமாயணத்தை இயற்றியவர் யார்?
2. எட்டுக்கால் பூச்சிக்கு எத்தனை கால்?
8. யாழ். மெயில் வண்டியில் சென்றுல் எந்த ஊருக்குப் போகலாம்?

ரி. பற்றிக்,
டிறிபேர்க் கல்லூரி,
சாவகச்சேரி.

## காந்திமகான் நாமம் சிரமேற்றிடுவோம்

மாந்தருய்ய அவதரித்த மகிமையினைத் தான்படைத்து
மானிடத்தின் அருமையினை மாண்புற்ற வாழ்வினலே
வானுலகும் போற்றுமாறு வாழ்ந்து வழிவகுத்த
மகாத்மாவாம் காந்திமகான் நாமஞ்சிரம் ஏற்றிடுவோம்

சத்தியாக் கிரகமெனும் சித்துமிக்க தத்துவத்தை
புத்தியாகப் பூவுலகம் புரியவழி செய்தவுத்தமர்
பத்தியமாய்ப் பயன்படுத்தும் பக்குவமும் சொல்லி வைத்த
நித்தியனும் காந்திமகான் நாமஞ்சிரம் ஏற்றிடுவோம்.

கத்தியின்றி இரத்தமின்றி கடுமையான போருமின்றி
சத்தியமாம் ஆயுதத்தைச் சத்தாயே பயன்படுத்தி
சுத்தமான போர்முறையைச் சூட்சுமமாய்ச் செய்துரைத்த
சத்தியவான் காந்திமகான் நாமஞ்சிரம் ஏற்றிடுவோம்

அநீதியைத் தகர்த்திடவே தன்னை வருத்திட்டார்
அநீதியில காவலரைத் தனதன்பாய் ஏற்றிட்டார்
அநீதியை எதிர்த்தாரன்றி அவர்களை எதிர்த்தாரில்லை
அற்புதனும் காந்திமகான் நாமஞ்சிரம் ஏற்றிடுவோம்.

சுந்தரராஜா தேவானந்தர்
(யாழ்ப்பாணக்கல்லூரி)

[கடந்த செவ்வாய்க்கிழமை (30-1-79 மகாத்மா காந்திஜியின் நினைவுதினம்]

# சிறுகதை

[3ம் பக்கத் தொடர்ச்சி)

குட்டித் தம்பிக்குப் பால் பருக்கிக் கொண்டிருந்தபோது வேலையிலிருந்து திரும்பிவந்த அம்மா கேட்டாள்,

'மெய்யேடி! காங்கேசன் துறையிலை ஒரு பணக்கார வீட்டுக்கு உன்னைப்போலை ஒரு பெட்டை தேவையாம் போறியே!'

'நான் போகேல்லை. அக்காவை வேணுமெண்டால் அனுப்பன்' என்று முறித்துவிட்டு எழுந்திருந்த என்னை அம்மாவிடவில்லை.

'அங்கை உனக்கு ஒரு வேலையுமில்லை. அந்த வீட்டுப் பிள்ளையள் இரண்டைப் பாக்கிறதுதான் அவைட்டைக் கார் இருக்கு அதிலை போகலாம். புதுச்சட்டை நல்ல சாப்பாடு எல்லாம் தருவினம்' ஏதோ நிறையச் சொல்லப் புறப்பட்ட அம்மாவை நான் இடைமறித்தேன்

'எனக்கு அதொண்டும் வேண்டாம். என்னைப் பள்ளிக்கூடம் போகவிடுவினமோ' அதைச் சொல்லு '

பாடசாலைக்குச் சென்று படிப்பதை எங்கள் வீட்டின் வாழ்க்கைப் பின்னணி அனுமதிக்காதபோதிலும் இங்கே போனல் படிக்கலாம் என்ற ஓர் ஆவேசத்தில்தான் அன்று நான் 'சரி' என்றேன். இங்கே வேலைக்கு வந்தால் பாடசாலைக்குப் போகலாம் என்ற உடனேயே என் மனதின் எண்ணங்கள் மாறிவிட்டன. விளையாட்டையும் தம்பி தங்கைமாரையுப் பார்ப்பதையும் நிறுத்திவிட்டுத் தலையைப் பலவிதமாக இழுத்து இழுத்து அலங்காரம் செய்துபார்த்தேன். பாடசாலைக்குப் போம்போது எப்படித் தலை வாரிக்கொள்வது என்று முடிவு செய்யாத நிலையில்தான இங்கே வந்து சேர்ந்தேன்

காங்கேசன்துறையின் கடற்கரை ஓரமாய் அமைந்திருந்த அந்தப் பங்களாவின் அழகு, இயற்கை வனப்பு, அவர்களின் அந்தப் பெரிய கார், மூன்று அல்சேஷன் நாய்கள் எல்லாவற்றையும் நான் வாழ் நாளில் கண்டிராத அதிசயங்களாய் பல நாள் பார்த்திருந்தேன்.

நாட்கள் ஒவ்வொன்றுய் நகரும் போது-அந்த வீட்டில் பால் வாங்கப்போவது முதல் சமைப்பதுவரை சகல வேலைகளையும் நானே செய்யவேண்டி இருந்தபோதும் இவர்கள் எனைப் பாடசாலைக்கு அனுப்பமாட்டார்களா என்று உளர அந்த ஏக்கம் இருக்கத்தான் செய்தது மனதில் துணிவை வரவழைத்துக் கொண்டு ஒரு நாள் எஜமானி அம்மாவிடம் கேட்டுவிட்டேன்

'அம்மா, என்னை ஸ்கூலுக்கு அனுப்பமாட்டீங்களா?' என்று.

''படிக்காதது ஒண்டுதான் குறை உனக்கு ... போடி கழுவாத ... போய் அந்தப் பானையைக் கழுவு'' என்று எரிந்துவிழுந்த குரல் என்னை ஒருபோதும் பாடசாலைக்கு அனுப்படபோவதில்லை என்பது மெதுவாகப் புரிந்தபோதுதான் என்னை இங்கே அனுப்புவதற்காகவே என்னிடம் பொய் சொல்லி ஏமாற்றிய தாயின் மீது அளவில்லாத சினம்மூண்டது அந்த ஏக்கம் நனவாகப்போவதில்லை என்று நிச்சயமான பிறகு, அந்த ஏக்கத்தின் ஒரு புதிய வாய்ப்பாக-அதன் சுவடுபோல காலையில் பாடசாலை செல்லும் இந்தக் கும்பலைப் பார்த்து மகிழ்வதை வழக்கமாக்கிக்கொண்டேன்.

பஸ் தூரச்சென்று மறைந்த பின்னர் கொண்டுவந்திருந்த போத்தலைக் கடையில் கொடுத்துப் பால் வாங்கிக்கொண்டு வீட்டிற்குத் திரும்பிச் செல்கிறேன்- எண்ணங்கள் மீண்டும் மீண்டும் அந்தந்தக் கும்பலையே வட்டமிடுகின்றன. கிட்டத்தட்ட என்னளவே வயதுள்ள அவர்களுக்கும் எனக்கும் ஸ்பஷ்டமாகத் தெரிகின்ற பல முரண்பாடுகள் நினைவில் வந்து மனதை உறுத்துகின்றன. அந்த உறுத்தலினல் மனதில் ஏற்படும் வலியும் சுளுக்கினல் காலில் ஏற்பட்டுவிட்ட வலியும் தெரியாதிருக்கும் பொருட்டு இன்னும் வேகமாக ஓடுகிறேன்.

வீட்டை அடைந்தபோது தோட்டத்து முனுசாமிதான் பூந்தோட்டத்தில்வேலைசெய்து கொண்டிருந்தான் பாலைச் சட்டியில் வார்த்து அடுப்பில் வைத்துவிட்டு நிமிர்ந்தபோது சவுக்குத்தடியும் சிவந்த கண்களுமாய் நின்றிருந்த எஜமானியைக் கண்டு நான் ஒருகணம் விக்கித்துப்போனேன்.

''எடியே! நீ இவ்வளவு நாளும் பால் வாங்கப் போறன் எண்டு விடியமுதல் ஒடுறசங்கதி இப்பதானே வெளங்கிச்சுது! பஸ்ஸுக்குள்ளை ஏறிப் பாடப் படிக்கிறியாமே... பாட்டு? முனுசாமி வந்து சொல்லாட்டி எனக்கு உன்ரை ஆட்டம் ஒண்டும் தெரிஞ்சிருக்காது...உன்ரை லட்சணத்திலை கூத்துவேறை ஆடுறியா... கூத்து...''

பாடசாலைக்குப்போகிற வயதில்- பாடசாலைக்குப் போகிறவர்களின் மகிழ்வில் ஒரு சில நிமிடங்கள் கலந்துகொண்ட குற்றத்திற்காக எஜமானி தந்த அந்தக் கொடூரமான சவுக்கடிகளை வாங்கிக்கட்டிக்கொண்டேன், நிணமும் சதையுமாய் காயங்கள் எல்லாம் ரத்தம் கசியும்போதும் அந்த வலியைவிட இதயப்புண்ணின் வலியே அதிகமாக இருக்கிற . மனதில் மூண்டெழுந்த வேதனைச் சுமையை வெடுக்கென விழுங்கிச் சமாளித்துக்கொண்டு, ஏக்கங்களை மடியவிட்டுவிட்டு சமையல் வேலைகளைத் தொடங்குகிறேன் (யாவும் கற்பனை)

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
சிவாஜி - ஜெயலலிதா
தெய்வமகன்

வெஸ்லி
(காவிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி - மஞ்சுளா
எங்கதங்கராஜா

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
ONE CHANCE IN
A THOUSAND
(War Film - color-Scope)

## பழையமாணவர் சங்கம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் திருஞான சம்பந்த வித்தியாசாலையின் பழையமாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம் மேற்படி பாடசாலை அதிபர் திரு கா. ஐயம்பிள்ளையின் தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் நடப்புவருட உத்தியோகத்தர்களாக தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் கா. ஐயம்பிள்ளை, உபதலைவர் செ. யோகேந்திரன், செயலாளர் ஐ. பாலசிங்கம் உபசெயலாளர் மா. லோகசௌந்தரி, தனாதிகாரி வ. செல்வநாயகம் எட்டுப் பேர்கொண்ட நிர்வாகசபை உறுப்பினரும் தெரிவு செய்யப்பட்டனர். (உ)

தினசரி 4 காட்சிகள் கடைசிவாரம்
ராணி எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
(யாழ். நகர்) நடித்த
சக்கரவர்த்தித் திருமகள்
(புதிய பிரதி)

மகத்தான 2-வது மாதம்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீதர் கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

4-வது ஜனத்திரள் வாரம்
தினசரி 4 காட்சிகள்
ராஜா விஜயகுமார், ஜெயசித்திரா. நாகேஷ்,
சுந்தரராஜன் நடித்த
பயணம்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
சிவகுமார் - கமலஹாசன் - ஜெய்சித்திரா
சொல்லத்தான் நினைக்கிறேன்

லிடோ போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்) ஆசை அறுபதுநாள்

மனோகரா
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
ஜெமினி - வாணிஸ்ரீ
தபால்காரன் தங்கை
(புதியபிரதி)
6-2-79 முதல் நூற்றுக்கு நூறு

7-வது ஜனத்திரள் வாரம்
வின்ஸர் போன்: 466
தினசரி 5 காட்சிகள்
(யாழ்ப்பாணம்) 10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

இன்று மட்டும்
சாந்தி (யாழ்நகர்) போன்: 7648
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எம். ஜி. ஆர் ... வீரப்பா ... சாவித்திரி
மகாதேவி (புதிய பிரதி),
5-2-79 முதல் தாமரை நெஞ்சம்

REGAL Daily at 4-30 7-00 & 9-30 p. m
(Jaffna) GREGORY PECK in
MILLION POUND NOTE
(Color)

# நீர் அற்ற புலமும்...

(4-ம் பக்கத்தொடர்ச்சி)

புறங் கூற்றுத் தீர்ப்பதோர்
பொருளுண்டேல் உரைத்
தைக்காண்!

பிறருக்கு எவ்வித காரணமும் இன்றிக் கொடுமை செய்தலினின்றும் மாறுமல் இருந்தாமல், மறமே தொழிலாகக் கொண்ட மறவர் நடமாடும் மலைவழியாக நீ இரவிலே வருகிறபோது,' இளமைப் பராயத்திலே அறநெறியில் வாழாதவன் முதுமைப்பராயத்திலே, தனக்காக இரங்குவாரோ உதவுவாரோ இன்றித் துன்பப்படுதலைப்போல, இவளும் மன அமைதி இன்றித் துன்பப் படுவாள். ஆனால், இரவை நீ இவளுடன் கழித்துவிட்டு அதிகாலையில் செல்லும்போது திறமை உடையவனுடைய செல்வம் மேலும் அதிகரிப்பதைப்போல, இவளும் அழகாகிய செல்வத்தைப் பெற்று இலட்சுமிகரமாக விளங்குகிறாள். இந்த அழகுச் செல்வம், பிறர் கூறும் பழிச்சொல்லைத் தீர்த்து, நிரந்தரமான செல்வமாக விளங்கும்வழி உண்டானால் அது என்னவழி எனக் கூறுவாயாக.

பணம் பத்தும் செய்யும்; பழிப்பவர் வாயையும் மூடும்; பிணத்தின் வாயையும் திறக்கும் மிகவல்லமை உள்ளது ஆனால் உனது அன்பின் காரணமாக இவள் பெற்ற அழகாகிய செல்வம், பிறரது வாயை மூடுவதற்குப் பதிலாக, திறந்து விடுகிறது, ஊரார் பழி கூறுவார்கள். திருமணம் நிகழ்ந்தால் அழகும், மாருமல் நீடித்திருக்கும்; அவரும் எழாது, முன்பு களவொழுக்கத்திலே பிறர் வாயைத் திறந்து வைத்த அழகாகிய செல்வம், இப்போது தலைவியைவிட்டு நீங்காமல் இருப்பதுடன், ஊரார் வாயையும் மூடிவிடும்.

மூன்று தாழிசைகளிலும் வைகறை வருகிறது; வற்புறுத்தப்படுகிறது. நடுச்சாமத்திலே தலைவன் வந்து செல்வதால், வைகறையில் தலைவி பொலிவுடன் பூரித்து நிற்கிறாள். காலையிலே அழகோடு விளங்கும் தலைவி, பொழுது ஏற ஏறப் பூரிப்பை இழந்து விடுகிறாள்; பிரிவுத் துயரினால் கருகிப் போகிறாள். நடுச்சாமத்தில் தலைவன் வருவானோ வரமாட்டானோ என்று ஏங்கித் தவிப்பதினால், அவன் வருகிற சமயத்தில் அழகிழந்தவளாகக் காட்சியளித்து, பின்வைகறையில் அழகு மிகுந்தவளாகத் திகழ்கிறாள்.

'என வாங்கு,
நின்னுறு விழுமம் கூறக்
கேட்டு
வருமே தோழி நல் மலை
நாடன்
வேங்கைவிரியிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள்
வரைந்தனன்
கொளற்கே''

இவ்வாறாக, உனக்கு ஏற்படும் துன்பங்களை நான் தலைவனிடம்கூற, அவற்றைத் தெளிவாக இருகாதுகளினாலும் கேட்டு, நல்ல மலைநாட்டுக்குத் தலைவன், வேங்கைப்பூ மொட்டுக்கள் விரிந்து, பூக்கின்ற காலத்திலே, நல்ல நாளிலே, திரண்ட மூங்கிலை ஒத்த தோள்களை உடைய உன்னை மணந்து கொள்ள, தோழி! இதோ வருகிறான்.

இளமையில் வாங்கிய ஈர்ஞ்
சடை அந்தணன்
உமையமர்ந் துயர் மலை
இருந்தனனாக
ஐயிரு தலையின் அரக்கர்
கோமான்
தொடிப்பொலி தடக்கையின் கீழ்புகுத் தம்மலை
எடுக்கல் செல்லாது உழப்
பவன் போல,
உறுபுலி உருஏய்ப்பப் பூத்த
வேங்கையை
கறுவுகொண் டதன்முதல்
குத்திய மதயானை
நீடிரு விடரகம் சிலம்பக்
கூஉய்த்தன்
கோடுபுய்க் கல்லா துழக்
கும் நாட! கேள்'
ஆரிடை என்னாய்நீ அரவஞ்
சாய் வந்தக்கால்
நீரற்ற புலமேபோற் புல்
லென்றாள், வைகறை
கார்பெற்ற புலமேபோற்
கவின்பெறும்; அக்கவின்
தீராமற் காப்பதோர் திற
னுண்டேல் உரைத்தைக்
காண்
இருளிடை என்னாய் நீ
இரவஞ்சாய் வந்தக்கால்
பொருளிலலான் இளமை
போற் புல்லென்றாள்
வைகறை
அருள்வல்லான் ஆக்கம்
போல் அணிபெறும்;
அவ்வணி
தெருளாமற் காப்பதோர்
திறனுண்டேல் உரைத்
தைக் காண்
மறந்திருந்தார் என்னாய் நீ
மலையிடை வந்தக்கால்
அறஞ்சாரான் மூப்பேபோல்
அழிதக்காள், வைகறை
திறஞ்சேர்ந்தான் ஆக்கம்
போல் திருத்தகும்;
அத்திரு
புறங்கூற்றுத் தீர்ப்பதோர்
பொருளுண்டேல் உரைத்
தைக் காண்
எனவாங்கு,
நின்னுறு விழுமம் கூறக்
கேட்டு
வருமே தோழி நன் மலை
நாடன்
வேங்கை விரியிடம் நோக்கி
வீங்கிறைப் பணைத்தோள்
வரைந்தனன்
கொளற்கே:

# கற்பனை....

[7ம் பக்கத் தொடர்ச்சி]

பவங்களையும் வெளிப்படுத்துவது அவசியம். ஆனால், பொதுவான உணர்வுகளை முனைப்பாகக் காட்டவேண்டும்.

**2-ப் பாட நேரம்**

1/2 மணித்தியாலம்.

அலகு: II

பொதுவான உணர்வுகளை எமக்கு வழங்கப்பட்ட நிகழ்வுக்கு அல்லது பாத்திரத்துக்கு இடமாற்றம் செய்யப் படவேண்டும்.

பயிலுனர் முன் அனுபவங்களை வெளிப்படுத்திய பிறகு இரண்டாவது அலகுக்கு ஆசிரியர் பயிலுனரை அறிமுகப் படுத்தலாம். இது புத்திபூர்வமான ஓர் ஏற்பாடாகும். சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஆசிரியர் நேரத்தை மாற்றியமைக்கலாம். பயிலுனர் உணர்வினை வெளிப்படுத்தும்போது பொதுவான இயல்புகள் முனைப்பாக நிற்பதை ஆசிரியர் திட்டமாக அறிவுறுத்தும் இரண்டாவது அலகாக அறிமுகப்படுத்தலாம்.

(உ-ம்) "சோர்வு, என்ற சொல் பயிலுனர் குழுவிற்கு அப்பியாசத்துக்கென கொடுக்கப்படுகின்றது. வேலைப் பிரிவினையின் அடிப்படையில் (Division of Labour) இயங்கும் ஒரு தொழிற்சாலையில் சட்டைகளுக்குப் பொத்தான் கட்டும் பெண் தொழிலாளருக்கு 'சோர்வுநிலை' இடம் பெற்றிருக்கின்றது. அதாவது பயிலுனர் பெண் தொழிலாளராக நடிபங்கேற்று நடிக்கவேண்டும். ஒவ்வொருவரும் சோர்வு பற்றிய தமது அனுபவங்களை மீளவரவழைத்து வெளிப்படுத்தவேண்டும். அகப்புலனில் சோர்வைக் காணப்பெறுகிறார்கள். கை, கால், முதுகு, உடல்எல்லாவற்றிலும்சோர்வு தட்டுகிறது. சோர்வு உணர்வு ஒரு நிலையாகி அகப்புலனில் எப்படிக் காணப்பெறுவார்களோ அப்படி வெளிப்படுத்துகிறார்கள் அதாவது தாம் இருந்த இடத்தில் இருந்தபடி கற்பனை அமைப்பில் கற்பனைச் சட்டைகளுக்கு வெறும் கற்பனையில் சட்டைப்பொத்தான்களைக் கட்டுகிறார்கள். இந்த அசாதாரணமான, ஆனால் யதார்த்தமான கலைப் படைப்பை வழங்குவதற்கு நடிப்புக்கல்லூரிகளில் பாடத் திட்டங்களில் பல அப்பியாசங்கள் இடம்பெற்றுளளன

(தொடரும்)

ஜி. ஜி. சிலைக்கு

## அடிக்கல் நாட்டப்பட்டது

[யாழ்ப்பாணம்]

குருநகரில் இம்மாதம் 11ந் தேதி நிறுவப்படவிருக்கும் அமரர் ஜி. ஜி பொன்னம்பலத்தின் சிலைக்கான அடிக்கல்லை, டாக்டர் ஏபிரகாம் நேற்று நண்பகல் நாட்டி வைத்தார்.

போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம். எச். முகமது, இம்மாதம் 11ந் தேதி மாலை இச்சிலையைத் திறந்துவைப்பார். இவ்விழாவில் சவூதி அரேபியாத் தூதுவரும், பாரியாரும் கலந்துகொள்வார்கள்.

# உள்ளடக்கமே...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

என்று எந்தக் கலாநிதியும், எழுத்தாளனும்இல்லை. எனக்கு நானே வழிகாட்டி என்று உறுதியோடு கூறுகின்றார்.

புதுக்கவிதைத்துறையிலே தீவிரமாக ஈடுபட்டுக்கொண்டு உழைத்துவரும் அதே வேளையில் மேமன் இனத்தின் தோற்றமும் வளர்ச்சியும்பற்றி ஆராய்ச்சியிலும் ஈடுபட்டுள்ளார். கொட்டாஞ்சேனை மத்திய மகாவித்தியாலயத்திலே தமிழ் படித்ததுதான் இவரது தமிழ் ஆற்றலுக்கு அத்திவாரம். மேமன்கவி மிகவும் சுறுசுறுப்பானவர். தேனீயைப் போன்ற கடும் உழைப்பு. எப்போதும் தேடல்கள். அண்மையிலேதான் திருமணம் முடித்தவர். திருமணத்துக்குப் பின் அவரது இலக்கியவேகம் கூடியிருப்பது புதுமை இல்லையா?

ஈழநாடு வாரமலரிலும் பல புதுக்கவிதைகளை எழுதியுள்ளார். சமூகப் பிரச்னைகளை எழுதுவதை விட எனது மனச்சிக்கல்களை எழுதும்போதே கடினமாக இருக்கிறதென்று கூறும்நமது கவிராயர் 'அக்னி' என்று முன்னர் வெளிவந்த புதுக்கவிதைச் சஞ்சிகையின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியவர் ஸப்னா (கனவு) என்ற இலக்கியத்துண்டுப் பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுவருகிறார். புதுக்கவிதை சம்பந்தமாக பல கட்டுரைகளையும் எழுதியுள்ளார்.

மேமன் கவியின் 'கடல்' கவிதையை நான் திருப்பத் திருப்ப படித்து ரசித்தேன்.

நீ உள்வாங்கும்
சருகுகள்
சரித்திரம் காண்பதில்லை
ஆடும் அலை மனங்களின்
சோகங்கள் தான்
உன் ஓலங்களாய்
பாய்கின்றனவோ

மேமன் கவிக்கு நிச்சயமாக புதுக்கவிதைத்துறையில் நல்லதோர் எதிர்காலம் உண்டு, அதற்கு...,

என்ன... சோனகத்தெரு வரை பேசிக்கொண்டே வந்தார் என்றல்லவா முன்னர் கூறினேன். அவர் அளவுக்கு மீறி மனதை அலைபாயவிடுகிறார். அதனால் பல முரண்பாடுகள். தெளிவற்ற நிலை. பதட்டம். இவை ஒரு கவிஞனைக் கொல்லும் விசங்கள்.

மரபு...மரபு என்று மக்களுக்கு விளங்காததை எழுதி என்ன பயன்? அதனால்தான் மரபை உடைத்து இதோ புதுக்கவிதை தருகிறோம் என்றீர்கள். உங்கள் கவிதை விளங்கவில்லையே என்றால் அப்படித்தான் இலகுவில் விளங்கிவிட்டால் அது என்ன இலக்கியம் என்கிறார் மேமன் கவி. எத்தனை முரண்பாடு இது. கவலை தெரிவித்தால் நாலைந்து தரம் படியுங்கள் விளங்கும் என்கிறார். அதை கவிஞரா சொல்வது; கவிதையல்லவா சொல்லவேண்டும்.

மேமன்கவி மக்களுக்காக மக்களுக்கு விளங்குவதை எழுதவேண்டும் இல்லாவிட்டால் நாளை...?

கேள்விக்குறிதான்.

# 95 வீத மாணவர் பகிஷ்கரிப்பு செய்தனராம்

## கல்வி திணைக்கள வட்டாரங்கள் தகவல்

[யாழ்ப்பாணம்]

பாடசாலை பகிஷ்கரிப்பு இரண்டாவது தினமான நேற்றுமுன்தினம் யாழ்ப்பாண மாவட்டத்தில் 95சதவீதமான மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துள்ளதாக, கல்வி இலாகா வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

முதல் தினம் 70 சத வீதமான மாணவர்கள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். யாழ்ப்பாண பாடசாலை அதிபர்கள், நேற்றுமுன்தினமும் உடனுக்குடன்மாணவர்வரவுபற்றி கல்வி இலாகாவிற்கு அறிவித்திருந்தனர்.

கிளிநொச்சி, பூநகரி, சாவகச்சேரி, வடமராட்சிப்பகுதிகளில் பகிஷ்கரிப்பு 95 வீதம் நடைபெற்றுள்ளதாகவும் கல்விப்பகுதி வட்டாரங்கள் தெரிவித்தன.

ஆசிரியர்கள்மட்டுமே பாடசாலைகளுக்கு வந்திருந்தனர்.

வரணி மகாவித்தியாலயத்தில் மொத்தம் 650 மாணவர்களில், முதல் நாள் 480 மாணவர் வந்திருந்ததாக அதிபர் பண்டிதர் பொன் கந்தையனார் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் மாணவர் வரவு அங்கு வெகுவாகக் குறைந்திருந்தது.

கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாசாலை, கொடிகாமம் அரசினர் பாடசாலையில் நூற்றுக்கு நூறு வீதம் பகிஷ்கரிப்பு நடைபெற்றது. கச்சாய், அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி பாடசாலைகளும் மாணவர்கள் முற்றாகப் பகிஷ்கரித்தனர் உசன் மகாவித்தியாலயத்தில் 5 வீத மாணவர்கள் வந்திருந்தபோதிலும் உடனடியாகத் திரும்பிச் சென்றுவிட்டனர்.

யாழ்ப்பாணம் நகரத்தைப் பொறுத்தவரை, நேற்றுமுன்தினம் மூதிடதனதிலும் பார்க்க மாணவர் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது

ஸ்ரான்லி மகாவித்தியாலயத்தில் மொத்தம் 1045 மாணவரில் நேற்றுமுன்தினம் 49 மாணவர்மட்டுமேவந்திருந்தனர். சென். பற்றிக்ஸ், யாழ் மத்திய கல்லூரி, யாழ் இந்துக் கல்லூரி, யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் மாணவர்கள் வரவு வெகுவாகக் குறைந்திருந்தது. யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் 223 மாணவர்மட்டுமே நேற்றுமுன் தினம் வந்திருந்தனர். வண்ணை வைத்தீஸ்வராவில் நேற்றுமுன் தினம் 60 மாணவர்மட்டுமே வந்திருந்தனர்.

ஊர்காவற்றுறைப்பகுதி பாடசாலைகளில், மாணவர்கள் மிகக்குறைவாகவே வந்திருந்தனர் எவ்வித அசம்பாவித சம்பவங்களும் இடம் பெறவில்லை.

## பிரச்னை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கத்தின் மூலம் இக் கோட்பாடுகளை அசையாத பற்றுறுதியுடன் கடைப்பிடித்துள்ளனர்.

ஆனால், இதுமாத்திரமே போதுமானதன்று. எல்லா அம்சங்களைப் பொறுத்தவரையிலுமே எமது மக்கள் சுதந்திரம் உடையவர்களாகவிருத்தல் வேண்டும். பொருளாதாரத்துறையிலும் அவர்கள் சுதந்திரமுள்ளவர்களாக இருத்தல் வேண்டும். சுதந்திரமும், நீதியும் நிறைந்ததொரு சமுதாயமே எமது குறிக்கோளாகும்.

எமது கட்சி பதவிக்கு வந்தவுடன், தொழிற்சங்கங்கள், சோசலிசம், சனநாயகம் ஆகிய யாவற்றுக்குமே முற்றுப்புள்ளி வைக்கப்படும் எனவும், அதுவே பாசிசம், சர்வாதிகாரம், முதலாளித்துவம் என்பனவற்றுக்கான ஓர் ஆரம்பமாகவும் அமையும் எனவும் நாட்டின் பல்வேறு வேறு மேடைகளிலிருந்தும், மூலை முடுக்குகளிலிருந்தும் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இவற்றையெல்லாம் கவனத்துடன் செவிமடுத்து, எமக்கு வாக்களித்து. எம்மை அதிகார பீடத்தில் அமர்த்தியுள்ளீர்கள்.

நமது நாட்டு மக்களானோர் வாழ்க்கையிற் தம்மீது சுமத்தப்பட்டுள்ள சுமைகளினின்றும் நிவாரணம் பெறும் நம்பிக்கையுடன் பல தடவைகள் தமது அரசாங்கங்களை மாற்றியமைத்துள்ளனர். அதே குறிக்கோளை மனதில் வைத்துத்தான் 1977 -ம் ஆண்டுவரை நிலவிய அரசாங்கத்தை நீங்கள் மாற்றி எங்களைத் தெரிவு செய்துள்ளீர்கள்.

நாம் இன்று எதிர்நோக்கும் சுமைகளை நீக்குவதாயின் வாழ்க்கையின் பாலும் சமுதாயத்தின் பாலும் நாம் கொண்டுள்ள மனப்பான்மைகளை மாற்றுதன் மூலமும் எமது தலைவர்கள் தமது உட்கிடையான நோக்கங்களை மாற்றமுறச் செய்வதன் மூலமுமே அது சாத்தியமாகும். இம்மாற்றங்கள் நிகழாதபட்சத்தில் இப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு எந்த அரசாங்கத்தினாலும் இயலக்கூடியதாக இராது.

எல்லா அரசியல், இன வேறுபாடுகளையும் மறந்து, இப்புவி மீதுள்ள ஏனையோரெல்லாம் சிறந்த ஓர் எடுத்துக்காட்டாகக் கண்டு களித்தற்கேற்ற ஒரு நாட்டினை, தீர்க்கமும் உறுதியும் வாய்ந்த மனத்துடன் கட்டியெழுப்பத் திடசங்கர்ப்பம் பூணுவோமாக. இன்றைய சமுதாயத்தின் இடத்தில் புதியதொரு சமுதாயத்தை நிறுவுவதற்கு நாமெல்லோரும் ஒன்றுபட்டு உழைப்போமாக. [ம]

## மரண அறிவித்தல்

### வின்சன்ட் மைக்கல் செபஸ்தியாம்பிள்ளை

ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர் வின்சன்ட் மைக்கல் செபஸ்தியான்பிள்ளை காலமாகிவிட்டார். இவர் ரேஸ்லின் தங்கம்மாவின் அருமைக் கணவரும் பேரின்பநாயகம் (U K), கருணைநாயகம் (அட்டம்பிட்டிய தோட்டம்-பண்டாரவளை), விஜயநாயகம் [ஸம்பியா], சபாநாயகம் [யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்பப்பிரிவு] மல்லிகா அந்தோனிப்பிள்ளை [ஏழாலை], ஜெயசீலநாயகம் [U. K.], செல்வநாயகம் [U K], தயாளநாயகம் [U.K.], விமலநாயகம் [U. K] ஆகியோரின் அன்புத் தந்தையும், பத்மா, கிருபா, ராஜு, ஆனந்தராணி, அந்தோனிப்பிள்ளை [கொழும்பு மாநகரசபை]. ஜசிந்தா வசந்தி, சுவந்தி, ஆகியோரின் மாமனாரும், நேசம்மா ஜோசப், காலம் சென்ற வின்சன்ற் ஜோசப், அகஸ்ரின் விஜயநாதன். அருள் சபாரட்டணம் ஆகியோரின் சகோதரரும், நவரட்ணம், காலம்சென்ற நாகலிங்கம்' துரைசாமி ஆகியோரின், மைத்துனருமாவர்.

அன்னாரது பூதவுடல் நல்லடக்கத்துக்காக 1979 பெப்ரவரி 4-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி. ப. 4 மணிக்கு ஏழாலை மேற்கு சுன்னாகத்திலுள்ள அவரது 'ரேஸ்லின் கொட்' இல்லத்திலிருந்து றோமன் கத்தோலிக்க சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் தயவுசெய்து ஏற்றுக்கொள்ளவும்.

1545

## மரண அறிவித்தல்

### நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக்குருக்கள்

சிவாகம ஞானபானு. பிரதிஷ்டாபூஷணம், இந்துமத பீடாதிபதி நயினை சிவஸ்ரீ கைலாசநாதக்குருக்கள் காலமானார். இவர் நயினாதீவு நாகபூஷணி அம்மன்கோவில் ஆதீன பிரதம குருவும். புங்குடுதீவு கந்தசாமி கோவில் பிரதம குருவும், ஐயாத்துரைக்குருக்களின் ஏகபுத்திரனும், விசாலாட்சி அம்மாளின் கணவரும், வாகீஸ்வரி அம்மா, நாகரெத்தினஅம்மா. கலாவதி ஆசிரியை. நாதரூபி, இராஜேஸ்வரன் ஆசிரியர், வாமதேவக்குருக்கள் ஆகியோரின் தந்தையும் குகதாசசர்மா, கணேசராஜக்குருக்கள் மலேசியா, பிரகதீஸ்வரசர்மா, இரகுநாதக்குருக்கள் ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஆத்மசாந்திக்கிரிகைகள் புங்குடுதீவில் 4-2 79 ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். 1531

## ஆசிரியர் உட்பட 9 பேர் கைதாகி விடுதலை

(யாழ்ப்பாணம்)

பகிஷ்கரிப்பு துண்டுப்பிரசுரம் வைத்திருந்தமைக்காக, தனியார் கல்விநிலைய ஆசிரியர் ஒருவரும் எட்டு மாணவர்களும் நேற்றுப பகல் பருத்தித்துறைப பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு, பின்னர் விடுதலைசெய்யபபட்டனர்.

[கெ]

## கி. ஆ. பெ. இன்று வருகிறார்

[உடுப்பிட்டி]

தமிழ்நாடு தமிழர் பேரவைத் துணைத்தலைவர் முத்தமிழ்க்காவலர் கி. ஆ. பெ. விஸ்வநாதம் இன்று விமானத்தில் கொழும்பு வருகிறார். கொழும்பில் திரு காளியப்ப பிள்ளையின் மகன் திருமணத்தில் கலந்துகொண்டு 8-ந் திகதி விமானத்தில் சென்னைக்குத் திரும்புவார்.

## விமான...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

### சபாநாயகர் அமீருக்கு அறிமுகம்

பின்னர் திரு தேசாய் சபாநாயகர், அமைச்சர்கள், எதிர்க்கட்சித்தலைவர், மற்றும் பிரமுகர்களுக்கு திரு தேசாயை அறிமுகம் செய்துவைத்தார்

பின்னர் விமான நிலையத்திலிருந்த பிரமுகர்கள் கூடத்திற்குச் சென்ற தேசாயை ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜயவர்த்தனா சிரம்தாழ்த்தி வணங்கினார் அடுத்து இவர்களுக்கு தேநீர் விருந்துபசாரம் ஒன்று அளிக்கப்பட்டது

அங்கிருந்து திரு தேசாயும் குழுவினரும் 5ஹெலிகாப்டர் விமானங்கள்மூலம் பேராதனை பூங்காவுக்குப்புறப்பட்டனர்

திரு, தேசாயுடன் விமானத்தில் திரு,ஜெயவர்த்தனா திரு, பிரேமதாசா, திருமதி பிரேமதாசா, திரு, லலித் அத்துலத்முதலி ஆகியோர் சென்றனர்,

### விமான நிலையம்

கட்டுநாயக்கா விமான நிலையம் இந்திய-இலங்கை தேசியக் கொடிகளாலும் மகர தோரணங்களாலும் அழகுற அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பலத்த பாதுகாப்பு போடப்பட்டிருந்த விமான ஓடுபாதையில் ஆயுதம் தாங்கிய விமானப்படை வீரர்கள் காவலுக்கு நிறுத்தப்பட்டிருந்தனர்,

திரு. பிரேமதாசா குழுவினர் சென்ற ஹெலிக்காப்டர் விமானங்கள் பேராதனைப்பூங்காவில் மகாவலிகங்கைக்கரையில் பகல் 11-00 மணிக்கு இறங்கியது.

## சொந்த...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ளுக்கு மதிப்பளிக்கப்படும் ஒரு சூழ்நிலையிலேயே சௌபாக்கியம் ஈட்டப்படமுடியும் என நாம் நம்புகிறோம். மனிதகுலத்தின் மகத்தான இலட்சியங் நிறைவேற்றப்படுதற்குரிய சூழலைக் கொண்டு விளங்கும் சமுதாயமே உரியதொரு சமுதாயமாகுமென நாம் கருதுகிறோம். எமது நாடு பல இனத்தவர்களையும், பல மதத்தினர்களையும் கொண்டுள்ளது என்பதையிட்டு நாம் பெருமையடைகிறோம். எமது நிலப்பரப்பில் காணப்பெறும் வேறுபட்ட கலாச்சார வளமானது எமது தேசியப் பாரம்பரியத்தின் மேன்மைக்கு தன்பங்கை நல்கியுள்ளது எமது பொதுத் தேச உணர்வை உறிதிப்படுத்துகின்ற காரணிகளை மேலும் ஸ்திரப்படுத்துவதற்கு நாம் திடசங்கற்பம் பூணுவோமாக.

## பலாலி ஊடாக...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பலாலி விமானநிலையத்தினூடான விமானச் சேவைகள் நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. இந்த விமான நிலையம் மார்ச்மாதம் முதலாம் திகதி மீண்டும் திறக்கப்படவிருப்பதாக இப்பொழுது தெரிகிறது. முதலில் திருச்சி-பலாலி விமான சேவையே ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

இதற்கான ஒழுங்குகளை மேற்கொள்வதற்கு விமான சேவைப் பகுதி உயர் அதிகாரிகள் பலாலி விமான நிலையத்தைப் பார்வையிட்டுச் சென்றனர். உள்ளூர் சேவை பற்றி எந்தவொரு முடிவும் எடுக்கப்படவில்லையாம்.

[சங்-நிரு]

## ஆசிரியர்களுக்கு...

[ -ம் பக்கத் தொடர்ச்சி[

ஸ்டான்லி கல்பகே, யாழ். கல்வி இலாகாவிற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்திருந்தார்

இதனைத் தொடர்ந்து பாடசாலையைப் பகிஷ்கரித்த நூற்றுக்கும் அதிகமான ஆசிரியர்க்ளுக்கு வேலையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவீர்களென அறிவிக்கப்பட்டுள்ளது

முன்னரே மருத்துவ அத்தாட்சிப்பத்திரம் வழங்காதவர்களுக்கே வேலைநீக்கக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. [ஏ]

## இன.மொழி...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தையே இரு நாட்டு மக்களும் பின்பற்றுகிறோம், ஒரே இன மக்களே இரு நாடுகளிலும் வாழ்கின்றனர். கடல்மட்டுமே எம்மைப் பிரித்துவைத்துள்ளது. எனது இலங்கை விஜயம் இருநாட்டு உறவை மேலும் வளர்க்க உதவும்,

வாக்குரிமை மூலம் இரு நாடுகளிலும் ஒரே சமயத்திலும் சுதந்திரப்பலு காக்கப்பட்டு சர்வாதிகார சக்திகள் தலைதூக்காதுதடுக்கப்பட்டன, இன்று இரு நடுகளிலும் ஒரே லட்சியத்திற்காகவே பாடுபட்டுவருகின்றன,

இந்தியப் பிரதமராகப் பதவி ஏற்றவுடன் இங்கு வந்திருக்கவேண்டும், ஆனல் இப்போதுதான் இங்கு வரமுடிந்தது. [ம-இ]

## இறியூனியன் ......

(2ம் பக்கத் தொடர்ச்சி)

தேவா தமது இலங்கை வருகையின் போது ஆராய்வார் எனத்தெரிகிறது.

கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய இடங்களில் ஏற்பாடு செய்யப்படும் கூட்டங்களில் கலந்துகொள்ளும் இவர் இறியூனியன் தீவுத் தமிழரின் இன்றைய நிலைபற்றி விளக்குவார்.

இறியூனியன் தீவுத்தமிழர் திருநாள் கொண்டாட்டத்தின் இறுதி நிகழ்ச்சியாக உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்க இலங்கைக்கிளைப் பணிமனையான குரும்பசிட்டி "தமிழகத்தில்" "இறியூனியன் தீவில் எங்கள் தமிழர்" என்ற நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது.

## மரண அறிவித்தல்

### செல்வி நளினி வல்லிபுரம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த சட்டத்தரணி வல்லிபுரம், யாழ்ப்பாணம் தாதிமார் பயிற்சிப் பாடசாலை அதிபர் திருமதி வல்லிபுரம் அவர்களின் அருமைப் புதல்வியும் நிரஞ்சனா, சத்தியேந்திரா [U. K], ஜமுனா, காஞ்சனா, நிமலேந்திரா ஆகியோரின் அருமைச் சகோதரியுமான நளினி காலமாகிவிட்டார். ஈமக்கிரியைகள் இன்று (4 2-79) ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணி அளவில் எழுதுமட்டுவாள் உபதபாற்கந்தோர் பங்களாவில் நடைபெறும்.

1546

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 4-ந்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the Geneial PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.